1-15 ஜனவரி 1997
www.padippakam.com
ரூ. 3.50

# புதிய ஜனநாயகம்




படிப்பகம்

www.padippakam.com

# தலித் கிறித்துவர்களுக்கு வழிபாட்டுரிமை மறுப்பு

## பாதிரிகளின் மனுதர்ம ஆட்சி

"தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு இட ஒதுக்கீடு வேண்டும்" என்ற கோரிக்கை நாடெங்கும் ஒலித்துக் கொண்டிருக்கிறது. மதம் மாறியவர்கள் என்ற ஒரே காரணத்துக்காக, அத்தாழ்த்தப்பட்டவர்களுக்கு இச்சலுகை மறுக்கப்பட்டு வருகிறது. மதம் மாறியதால், தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவர்களின் சமூகத் தகுதி உயர்ந்துவிட்டதா என்ன? ஒருபோதுமில்லை.

சமூக நீதிக் கட்சிகள் என்று தமக்குத் தாமே பட்டம் கொடுத்துக் கொண்டுள்ள தி.க.வும், தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் கொடிகட்டிப் பறக்கும் தமிழ்நாட்டில், தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு அரசியல் சாசனம் கொடுத்துள்ள அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுகின்றன. மேல்சாதி கிறிஸ்தவர்கள்-மத குருமார்கள்-போலீசு-அதிகார வர்க்கம் என்ற புனிதக் கூட்டை எதிர்த்துப் போராடித்தான் தங்கள் உரிமையை நிலைநாட்டி வருகிறார்கள் அவர்கள். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல நாம் இங்கு தொகுத்துக் கொடுத்திருக்கும் சம்பவம், தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவர்கள் மீது தொடுக்கப்படும் சாதிய ஒடுக்குமுறையை வாசகர்கள் புரிந்துகொள்ள உதவும்.

தஞ்சைக்கு அருகிலுள்ள வல்லத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவர்கள், அவ்வூரின் புனித சவேரியார் தேர் தாங்கள் வசித்து வரும் தெரு வழியாகவும் வந்து செல்ல வேண்டும் எனக் கோரி, கடந்த 1989 தொடங்கி ஏழு ஆண்டுகளாகத் தொடர்ந்து போராடி வருகின்றனர்.

மேல்சாதி (உடையார்) கிறிஸ்தவர்களால் தங்களுக்கு வழிபாட்டு உரிமை மறுக்கப்படுவதை எதிர்த்து 1991, 1992 மற்றும் 1993-ம் ஆண்டுகளில் நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தனர், வல்லம் தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவர்கள். இதனால் இம்மூன்று ஆண்டுகளிலும் தேர் திருவிழா கொண்டாடுவதற்கு நீதிமன்றம் தடை விதித்தது. ஆயினும் 1993-ம் ஆண்டு நீதிமன்றத் தடையை மீறி தேர் இழுக்க உடையார் சாதி கிறிஸ்தவர்கள், உள்ளூர் அரசியல் பிரமுகர்கள்-ரவுடிகளின் துணையை நாடினர். இச்சதியை முறியடிக்க, தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவர்கள் தேர் வரும் பாதையில் மறியல் செய்தனர். போலீசோ உயர்சாதி கிறிஸ்தவர்களுக்கு கைக்கூலியாக மாறி, தாழ்த்தப்பட்டோரை சட்ட விரோதமாக கடத்திச் சென்று, கண்காணாத இடத்தில் மறைத்து விட்டு, மேல்சாதியினரின் சதிக்குத் துணை போனது.

அடுத்து வந்த இரு ஆண்டுகளிலும் (1994, 1995) உயர் சாதி கிறிஸ்தவர்களின் சார்பாக தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவர்களிடம் கட்டை பஞ்சாயத்து செய்த போலீசும் அதிகார வர்க்கமும், "ஒவ்வொரு சாதியினரும் ஓர் ஆண்டு இழுக்கலாம்" எனத் தீர்மானம் நிறைவேற்றினர். ஆனாலும் தீர்மானத்தின் படி தாழ்த்தப்பட்டவர்கள் தேர் இழுப்பதற்கு முட்டுக் கட்டை போட்டு, சனாதன தர்மத்தை நயவஞ்சகமாக நடைமுறைப்படுத்தினர்.

இவ்வாண்டு (1996) டிசம்பர் மாத தேர் திருவிழாவின்பொழுது, தஞ்சையில் செயல்பட்டு வரும் ம.க.இ.க. தோழர்கள் வல்லம் தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவர்களின் உரிமைப் போராட்டத்திற்கு தோள் கொடுக்க முன் வந்தனர். ம.க.இ.க. தலையிடுவதைத் தெரிந்துகொண்ட அதிகாரிகள் சமரச ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த முயன்றனர். பல உயர் அதிகாரிகளோடு தஞ்சை பாராளுமன்ற உறுப்பினரும் கலந்து கொண்ட முத்தரப்பு பேச்சுவார்த்தை 2.12.96 அன்று காலையில் தொடங்கி, விடிய விடிய நடைபெற்றது. பேச்சுவார்த்தையின் முடிவில் "தேரைத் தாழ்த்தப்பட்டவர்களிடம் ஒப்படைக்க வேண்டும்" எனத் தீர்மானிக்கப்பட்டது.

ஆனாலும் மேல்சாதி வெறி கொண்ட உடையார் சாதி தலைவர்கள், "தேர் பழுதாகியுள்ளது; பழுது நீக்க வேண்டும்" எனக்

கூறி, பழுதுநீக்குவது போல் பாசாங்
செய்து தேரை ஒப்படைக்காது காலம் கட
தினார்கள். பின்னர் தேரின் அலங்கார
தைக் கலைத்து, சாமி சிலையின் மீது பூ
டப்பட்டிருந்த ஆடைகளை அவிழ்த்
தேரை நாசமாக்கத் தொடங்கினர். இத
பின் போலீசார் தடியடி நடத்தி, மேல்சா
வெறியர்களைக் கைது செய்து, தே
தாழ்த்தப்பட்டவர்களிடம் ஒப்படைத்தன

தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவர்களுக்
இட ஒதுக்கீடு கோரி ஊர்வலம் சென்
தன்னை சமத்துவவாதியாகக் காட்
கொண்டு வருகிறது, கிறிஸ்தவ மத பீட
ஆனால் வல்லத்தில் தாழ்த்தப்பட்ட கிறி
தவர்கள் போராடியபொழுது, மத குரும
களின் கண்களில் கருணை குடிகொண்
ருக்கவில்லை; அவர்கள் பைபிளை மூ
வைத்து விட்டு, சனாதன தர்மத்தைத் த
கிக் கொண்டனர்.

தி.மு.க., அ.தி.மு.க.வில் தொடங்
தன்னார்வ குழுக்கள் வரை எந்தவொ
அமைப்பும் (ம.க.இ.க.வைத் தவிர) அ
கள் போராட்டத்தை ஆதரிக்கவில்லை
தி.க. வீரமணிக்கோ வல்லத்தில் உள்
தனது கல்லூரிகளின் கல்லாப் பெட்டியி
மீதுதான் கவனமிருக்கிறது. 'தாழ்த்தப்ப
டோர்-பிற்படுத்தப்பட்டோர் ஒற்றுமை
என்ற சமூக நீதிக் கட்சிகளின் கோஷ
வெளிவேஷம் மட்டுமல்ல; அது வெறு
ஏட்டுச் சுரைக்காய் என்பதையும் இப்போ
ராட்டம் மீண்டும் ஒருமுறை மெய்ப்பித்து
காட்டியுள்ளது.

தேரை நாசமாக்கியதன் மூலம் தா
தப்பட்டவர்களை அவமானப்படுத்திவி
டதாக எண்ணி மேல்சாதி தலைவர்
பெருமிதம் கொள்ளலாம். ஆனால் ச
திமிரால், தங்கள் சாதியைச் (உடையா
சேர்ந்த மக்களிடமே அம்பலப்பட்டு அ
ணமாகி நிற்கிறார்கள் என்பதே உண்ள
வழிபாட்டு உரிமைக்காக தாழ்த்தப்ப
கிறிஸ்தவர்கள் தொடுத்துவரும் போரா
முதல் வெற்றியாகும் இது. தகவ

ம.க.இ.க., தஞ்

மேல்சாதி வெறியர்களால் அலங்கோலமாக்கப்பட்ட தேர் (முதலில் நிற்பது





படிப்பகம்

www.padippakam.com

புதிய
ஜனநாயகம்

மார்க்சிய — லெனினிய
அரசியல் ஏடு

தொகுதி: 12
இதழ்: 3 - 4
16 டிச. '96 - 15 ஜன. '97

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 3.50
ஆண்டு சந்தா: ரூ. 84.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

அட்டை ஓவியம்: கரோ

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
புதிய ஜனநாயகம்,
அஞ்சல் பெட்டி எண்: 6015,
அசோக் நகர்,
சென்னை - 600 083.

# காங்கிரசில் தொடரும் நரிகளின் நாட்டாமை

கோடி கோடியாய் ஊழல் - மோசடிகளில் சிக்கி அம்பலப்பட்டுப் போயுள்ள முன்னாள் பிரதமர் ராவ், கட்சித் தலைவர் பதவியிலிருந்து விலகியதைத் தொடர்ந்து காங்கிரசுக் கட்சிக்குள் குத்துவெட்டு, பதவிப் போட்டி, கோஷ்டிச் சண்டைகள் தீவிர மாகி நாடெங்கும் நாறுகிறது. கடந்த செப்டம்பர் இறுதியில், தனது நம்பகமான விசுவாசியான சீத்தாராம் கேசரியை கட்சித் தலைவர் பதவியில் அமர்த்தி, தான் விலகிக் கொள்வதன் மூலம் அதிருப்தி கோஷ்டியைக் கட்டுப்படுத்திவிட முடியும்; தனது கோஷ்டியின் செல்வாக்கையும் அதிகாரத்தையும் தக்க வைத்துக் கொள்ள முடியும் என்று நரசிம்ம ராவ் போட்ட கணக்கு தப்புக் கணக்காகிப் போய்விட்டது.

காங்கிரசின் புதிய தலைவரான கேசரி, ராவ் கும்பலைச் சேர்ந்த பலரைக் கட்சியின் முக்கிய பொறுப்புகளிலிருந்து தூக்கியெறிந்துவிட்டு, தனது விசுவாசிக ளையும் கூட்டாளிகளையும் அப்பதவிகளில் நியமித்து புதியதொரு கோஷ்டியாக மாறி அதிகாரம் செலுத்தக் கிளம்பிவிட்டார். ராவ் காலத்தில் வெளியேற்றப்பட்ட அல்லது தாமாகவே வெளியேறிய அனைவரையும் மீண்டும் கட்சியில் சேர்த்து, "ஞானஸ்தானம்" செய்து வைக்கிறார். காங்கிரசின் தேர்தல் தோல்விக்கும், பிளவு கள்-பின்னடைவுக்கும் நரசிம்ம ராவ்தான் காரணம் என்று முத்திரை குத்துவது; ராவுக்கு எதிரான காங்கிரசுப் பெருச்சாளிகளை ஒன்றுபடுத்துவது; அதன்மூலம் ராவ் கும்பலைக் கட்சியில் தனிமைப்படுத்தி ஓரங்கட்டுவது; கட்சித் தலைவர் பதவியோடு நாடாளுமன்ற காங்கிரசுக் கட்சித் தலைவர் பதவியையும் கைப்பற்றிக் கொண்டு, காங்கிரசு என்றாலே கேசரிதான் என்ற நிலையை உருவாக்குவது; தேவே கௌடா அரசைக் கவிழ்த்து பிரதமராக முடிசூட்டிக் கொள்வது என்ற நோக்கத்துடன் கேசரி காய்களை நகர்த்துகிறார். ஆனால், நரசிம்ம ராவுக்கு நெருக்கடிகள் - நிர்ப்பந்தங்கள் கொடுத்து நாடாளுமன்ற கட்சித் தலைவர் பதவியிலிருந்து விலகச் செய்ததும், அப்பதவியைக் கைப்பற்ற அனைத்துக் கோஷ்டிகளும் நாய்ச் சண்டையில் இறங்கி விட்டன.

மகாராஷ்டிராவின் வசூல் சக்கரவர்த்தியும் பெரு முதலாளிகளின் நம்பகமான கூட்டாளியுமான சரத் பவார் ஒரு அணியாகவும், ராஜீவின் விசுவாசியும் நெருங்கிய கூட்டாளியுமான ராஜேஷ் பைலட் ஒரு அணியாகவும் இப்பதவியைக் கைப்பற்ற வெளிப்படையாகவே போட்டியில் இறங்கி விட்டனர். மறுபுறம், தேர்தலின்றி பொதுக் கருத்து அடிப்படையில் இப்பதவிகளுக்கான தலைவர்களை நியமிப்பது தான் காங்கிரசின் மரபு - பாரம்பரியம் என்று கூறிக் கொண்டு, மாநில காங்கிரசுத் தலைவர்களைச் சரிக்கட்டி, கட்சித் தலைவர் பதவியோடு இப்பதவிகளையும் கைப் பற்றிக் கொள்ள கேசரி கோஷ்டி முயற்சிக்கிறது. இதை எதிர்த்து, ஒரு நபர் - ஒரு பதவி என்ற நடைமுறை தேவை என்று ராவ் கும்பல் கலகம் செய்கிறது.

ஆனால், தேர்தல் தோல்விக்கான காரணங்களை ராவ் கும்பல் மீது சுமத்தி, பழம் பெருச்சாளிகளை ஒன்றிணைத்து கட்சியைப் பலப்படுத்துவதாக மாய்மாலம் செய்து வரும் கேசரி, கட்சிக்குள்ளேயும் வெளியேயும் செல்வாக்கு மிக்க தலைவர் அல்ல. ராவ் எதிர்ப்பு வேஷங்கட்டி ஆடும் கேசரியும், இதர கோஷ்டிகளின் பெருச்சாளிக ளும் நேற்று வரை ராவ் விசுவாசிகளாக இருந்து ஆதாயமடைந்தவர்கள்தான். பிற் பட்ட சாதியைச் சேர்ந்த எளிய தலைவராகச் சித்தரிக்கப்படும் கேசரியும் கோடிக்க ணக்கில் சொத்துக்களைக் குவித்து வைத்துள்ள ஊழல் பெருச்சாளிதான். அவரது ஊழல் - கொள்ளை பற்றி பாட்னா உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு சி.பி.ஐ. விசாரணைக்குக் காத்திருக்கிறது. இந்த இலட்சணத்தில் புதிய தலைவரால் காங்கிரசு புனிதமடைந்து விடாது. பணபலம் - கிரிமினல் பலத்தால் கோஷ்டிகளைக் கட்டிக் கொண்டுள்ள காங்கிரசு தலைவர்களுக்குப் பதவி வெறியைத் தவிர கொள் கையோ - இலட்சியமோ கிடையாது.

பாசிச இந்திரா - ராஜீவுக்குப் பிறகு செல்வாக்குமிக்க - கவர்ச்சிவாதத் தலைவர் கள் இல்லாத நிலையில், காங்கிரசில் இன்று எஞ்சியிருப்பது கழிசடைகள்தான். நிலைமையைச் சாதகமாக்கிக் கொண்டு சில கோஷ்டிகள் தலைமையைக் கைப்பற்றிக் கொள்வதும், பழியை மற்றவர்கள் மீது போட்டுவிட்டு புனிதர்களாக நாடகமாடுவ தும்தான் ராவ் காலத்திலிருந்து தொடர்கிறது. இந்நிலையில், நாட்டை மறு அடகு வைக்கும் துரோகிகள் - கிரிமினல்கள் - பிழைப்புவாதிகளின் கூடாரமான காங்கிர சில், நாட்டையும் மக்களையும் வழிநடத்திச் செல்ல எந்தக் கோஷ்டியாலும் உருப்படி யான தலைமை தர முடியாது. அதற்கான அடிப்படையோ, அருகதையோ அவர்களி டம் கிடையாது. புதிய மொந்தையில் பழைய கள்ளை ஊற்றி விற்கும் காங்கிரசு கயவாளிகளின் நரித்தனத்தைக் கண்டு மக்கள் ஏமாறவும் முடியாது.

www.padippakam.com

# காராகிருகத்தில் அடைக்க வேண்டிய ஜெயா - சசிக்கு சிறையிலும் சொகுசு!

கடைசியில், ஊழல் மகாராணி ஜெயலலிதா கைது செய்யப்பட்டுவிட்டார். தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் இதை அமைதியான மகிழ்ச்சியோடு வரவேற்ற அதேசமயம், அ.தி.மு.க. கிரிமினல்கள் வழக்கமான ரௌடித்தனத்தோடு தமது எதிர்ப்பைக் காட்டினர். அதுவும் ஓரிரு நாட்களில் அடங்கிப் போய்விட்டது. எரியும் வீட்டில் பிடுங்கியதுவரை இலாபம் என்று சில வக்கீல்களும், இன்னும் ஏதாவது எலும்புத் துண்டு கிடைக்குமா என்று அ.தி.மு.க. பொறுக்கி அரசியல் பிரமுகர்களும், குண்டர்களும் சிறைவாசலில் காத்துக்கிடக்கின்றனர்.

''பார்த்தீர்களா! ஜெயலலிதா போன்ற அரசியல், ஊழல் கிரிமினல்களைச் சட்டம், வழக்கு, விசாரணை என்கிற வழக்கமான வழிகளில்போய் தண்டிக்கும் முயற்சி என்பது பானைக்குள் யானையை அடக்க முயற்சிப்பதுதான் என்று அட்டைப்படக் கேலிச் சித்திரம் போட்டுத் தலையங்கம் எழுதினீர்களே! இதோ, ஜெயலலிதா விவகாரத்தை எவ்வளவு அரசியல் திறமையோடு கலைஞர் கையாண்டுள்ளார்!'' என்று தினாமுனாகானாக்கள் கேட்கிறார்கள்.

உண்மைதான்! கண்ணப்பன் - முத்துசாமி போட்டி கும்பலிடம் தாராளமாகவும், ஒருதலைபட்சமாகவும் நடந்து கொள்கிறார் என்கிற ஒரு கரும்புள்ளி தவிர, அவரது அரசியல் எதிரிகள்கூட மறுவாதம் வைத்திட முடியாத அளவுக்கு நாட்டிலுள்ள ஓட்டுக் கட்சி அரசியல் தலைவர்கள் அனைவரையும்விட கைதேர்ந்த ''இராஜதந்திர''த்துடன் ஜெயா - சசி கும்பலின் இலஞ்ச - ஊழல் விவகாரத்தைக் கருணாநிதி கையாண்டுள்ளார்.

ஜெயா - சசி கும்பலின் இலஞ்ச - ஊழல் விவகாரங்களின் மீது விசாரணைக் கமிசன் போட்டு இழுத்தடித்து காலத்தைக் கடத்துவதற்குப் பதிலாக, போலீசு - நிர்வாக அதிகாரிகளைக் கொண்ட நேரடிப் புலனாய்வுக் குழு அமைத்தார்.

ஜெயா - சசி கும்பலின் குற்றங்கள் எல்லாம் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்தபோதும், சசிகலா குடும்பத்தினர் மீதான சில வழக்குகளை மட்டுமே பிரித்தெடுத்து கைது செய்து சிறையிலடைத்தது; சசியுடனான உறவை அறுத்துக் கொண்டதாக நாடகமாடிய ஜெயலலிதா மீண்டும் அந்த உறவைப் புதுப்பித்துக் கொண்டு அம்பலப்பட வைத்தது; இதனால் ஜெயலலிதாவின் முன்னுக்குப் பின் முரணான நடவடிக்கைகளைத் தோலுரித்துக் காட்டியது ஆகியவை சிதம்பரத்துடன் சேர்ந்து கருணாநிதி செய்தது திறமையான காரியமாகும்.

ஜெயா - சசி கும்பலின் பரிவாரங்களான முன்னாள் அமைச்சர்களில் தெரிந்தெடுத்த சிலரை மட்டும் கைது செய்து, சிலரது வீடுகளைச் சோதனையிட்டு, பீதியூட்டி அந்த முகாமையே கலகலக்கச் செய்தது; போட்டி அ.தி.மு.க. கும்பலை இலாவகமாகக் கையாண்டு தன்னை யாரும் ஆட்டவோ அசைக்கவோ முடியாதென்றிருந்த ஜெயாவின் கட்சியைப் பிளவுபடுத்திப் பலவீனமடையச் செய்தார் கருணாநிதி.

ஜெயலலிதா முற்றாக அம்பலப்பட்டு, எல்லா சட்டபூர்வமான, நீதிமன்ற வாய்ப்புகள் - முறைகளிலும் தோல்வியுற்ற நிலையில் கைதுசெய்து சிறையிலடைத்தது; உடனடியாகவே அவரது மாளிகைகளைச் சோதனையிட்டு ஆடம்பர உல்லாச சுகபோக வாழ்க்கை அம்பலப்படுத்த சொத்துக்களையும் கைப்பற்றியது; தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் பிரமித்துப் போகுமளவுக்கு, ஜெயலலிதாவின் பார்ப்பன ஆதரவாளர்களே மறுக்கமுடியாத அளவு பிரச்சாரம் செய்தது கருணாநிதியின் இன்னுமொரு திறமையான காரியமாகும்.

இருந்தபோதும், ''தமிழ்நாட்டையே சூறையாடி உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் ஜெயா - சசி கும்பல் சேர்த்துவைத்துள்ள சொத்துக்களைப் பறிமுதல் செய்து, சிறையிலடைத்துக் கடுமையாகத் தண்டிக்கப்படுமா?'' என்கிற சந்தேகம் நீங்கி விடவில்லை. இந்தச் சந்தேகத்துக்கான காரணங்களாகப் பின்வருவனவற்றை ஏற்கனவே நாம் எடுத்துச் சொல்லியிருக்கிறோம்:

''முதலாவதாக, ஜெயா - சசி கும்பலுக்கு எதிரான நடவடிக்கையை முனைப்போடு நடத்துவதற்கான தார்மீக பலமும் உரிமையும் மத்திய, மாநில ஆட்சியாளர்களிடம் கிடையாது. குறிப்பாக இலஞ்ச - ஊழல் பெருச்சாளிகள், கிரிமினல் குற்றவாளிகளைக் கொண்டும், வெளியிலிருந்து அத்தகைய நபர்களின் ஆதரவாலும் தான் மத்திய ஆட்சி நடக்கிறது. அதன்கீழ் நீதித் துறையும் சி.பி.ஐ.யும் வழக்குகளை விசாரித்து வரும் யோக்கியதை கண்டு நாடே சிரிக்கிறது.

இரண்டாவதாக, யாரையும் விலைகொடுத்து வாங்கும் பண பலமிக்க ஜெயா - சசி கும்பலுக்கு ஐக்கிய முன்னணி, காங்கிரசு, பாரதீய ஜனதா ஆகிய மூன்று தரப்பிடமும், விஜய் மல்லையா, உடையார், அய்யங்கார், செட்டியார் குடும்பங்கள் போன்ற தரகு முதலாளிகளிடமும், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். முதல் மத்திய உளவுத் துறை, வருமான வரி மற்றும் அமலாக்கப் பிரிவு வரையும், நீதித்துறையிலும்கூட செல்வாக்கு உள்ளது. நான்காவதாக, சட்டத்திலும் நீதித்துறையிலும் உள்ள ஓட்டைகள், சிக்கல்கள், முரண்பாடுகளைப் பயன்படுத்திக் கொண்டு, நாட்டிலேயே அதிக ஊதியம் பெறும் பிரபல வழக்கறிஞர்களை வைத்து வழக்குகளை இழுத்தடித்து முடக்கி விடுவதில் ஜெயா - சசி கும்பல் வெற்றி பெற்று வருகிறது. ஐந்தாவதாக, ஏற்கனவே ஆதிக்கம் வகித்து வந்த கவர்ச்சிவாத, பிழைப்புவாத, பொறுக்கி அரசியல், ஜெயா - சசி குடும்ப ஆட்சிக் காலத்தில் முழுவதும் கிரிமினல்மயமாகி விட்டது. மாநகரில் இருந்து கிராம மட்டம் வரைப் பரவி விரவியுள்ள கிரிமினல் வலைப் பின்னலின் ஆதரவு ஜெயா - சசி குடும்பத்திற்கு இருக்கிறது.''(பு.ஜ. டிசம்பர் ' 96 இதழ் தலையங்கத்திலிருந்து).


ஜெயலலிதா கைதுக்குப் பின் நடந்துள்ள சம்பவங்கள் மேற்கண்ட சந்தேகத்தை நீக்குவதற்குப் பதிலாக மேலும் உறுதி செய்திருக்கின்றன.

கடுமையான ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு இலக்காகியிருக்கும் ஜெயலலிதாவை புது டில்லியில் சகல மரியாதைக...
வரவேற்று அளவளாவி இருக்கிறார், பிரதமர் தேவே ...
தி.மு.க. மற்றும் த.மா.கா.வின் எதிர்ப்புகளையும் மீறி ...
ருக்கிறது. இந்தச் சந்திப்பிற்குப் பிறகு சசிகலா, தின...
இருவரும் ''காபிபோசா'' - அந்நியச் செலாவணி...
தண்டனையில் இருந்து விடுவிக்கப்பட்டிருக்கின்...
பிரதமர் சந்திரசேகர், பாரதீய ஜனதா, காங்கி...
ராம் கேசரி ஆகியோரிடம் ஆதரவு கோரி...
நாட்டுக் காங்கிரசாரின் எதிர்ப்பையும் மீறி...
ளின் ஆடம்பரத் திருமணத்தில் பங்...



படிப்பகம்

www.padippakam.com







**ஐந்து வருடங்களாக மக்கள் சொத்தைக் கொள்ளையடித்து ஜெயா - சசி கும்பல் வாங்கிக் குவித்துள்ள தங்க நகைகள் - வெள்ளிப் பாத்திரங்கள். இக்கிரிமினல்களுக்கு பரிவு காட்டத் தேவையில்லை**

சீதாராம் கேசரிதான் இப்போது காங்கிரசுத் தலைவராகியுள்ளார். எனவே நரசிம்ம ராவை விடக் கூடுதலான ஆதரவை கேசரியிடமிருந்து ஜெயா பெறக்கூடும். சிறையிலடைக்கப் பட்டிருக்கும் ஜெயாவைச் சந்தித்து ஆறுதலும்'ஆதரவும் காட்டுவதற்கு பாரதீய ஜனதாவின் தூதுவராக ஆந்திராவின் லட்சுமி சிவபார்வதி அனுப்பிவைக்கப் பட்டிருக்கிறார்.

ஜெயலலிதா கைதானதைக் கண்டித்து அ.தி.மு.க. எம்.பி.க்கள் நாடாளுமன்றத்தில் கலாட்டா செய்ததை தி.மு.க. - த.மா.கா. மட்டுமே எதிர்த்துள்ளன. போலிக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் ''நடுநிலை'' வகிக்க, ஐக்கிய முன்னணிக் கட்சிகளும்கூட குறிப்பாக ஜனதா தளத்தினர் ஊழல் மகாராணிக்காக நீலிக் கண்ணீர் வடித்தனர். பாரதீய ஜனதா, காங்கிரசுக் கட்சி எம்.பி.க்கள் அப்பாவிப் பெண்ணை சிறையிலடைத்துக் கொடுமைப்படுத்தும் குற்றம்புரிந்து விட்டதாகப் பெருங்கூச்சல் போட்டுள்ளனர்.

காங்கிரசின் மார்க்கரெட் ஆல்வா, அலுவாலியா, பாரதீய ஜனதாவின் சுஷ்மா சுவராஜ், முன்னாள் பிரதமர் சந்திரசேகர், மாநிலங்களவைத் துணைத் தலைவர் நஜ்மா ஹெப்துல்லா ஆகிய ஜெயாவின் சகபாடிகள் எல்லாம் எகிறிக் குதித்துள்ளனர். குற்றம் நிரூபிக்கப்படுவதற்கு முன்பு சிறையிலடைத்துத் தண்டிப்பதாகவும், துன்புறுத்தப்படுவதாகவும், கேவலமாக நடத்தப்படுவதாகவும், உயிருக்கு ஆபத்து சூழ்ந்து விட்டதாகவும் கூப்பாடு போடுகின்றனர். பாரதீய ஜனதாவும், தி.க.வின் வீரமணியும் ஒரேகுரலில் கண்டிக்கின்றனர். இவையெல்லாம் ஊழல் மகாராணிக்கு இன்னமும் ''சர்வ கட்சி'' அரசியல்வாதிகளிடையே உள்ள செல்வாக்கைக் குறிக்கின்றன.

ஜெயா - சசி கும்பலின் இலஞ்ச ஊழலை விசாரிக்கும் புலனாய்வுக் குழுவோ இன்னமும் அதனிடம் பழைய மரியாதையுடன் நடந்து கொள்கிறது. தான் கைதுசெய்யப்போன குற்றவாளியின் வசதிக்கேற்ப, பூசை முதலிய காரியங்கள் முடிக்கும்வரை காத்திருந்தது; விசாரணைகளை மரியாதை, பணிவுடனும், கைதியின் வசதிக்கேற்பவும் நடத்துகிறது. ஜெயா மாளிகையில் உள்ள நகைகளை நீதிமன்றத்திடம் ஒப்படைப்பதற்காகக் கைப்பற்ற முயன்றபோது ஜெயலலிதாவின் செயலாளர் மறுத்ததை ஒரு பொருட்டாக மதித்து வெளியேறியது. சட்டபூர்வமான இச்செய்கைக்கே மீண்டும் நீதிமன்ற உத்திரவு கேட்டுப் பெற்றது.

நீதித் துறையோ, ஆரம்பத்தில் காட்டிய கறாரான நிலையைக் கைவிட்டு, ஜெயா - சசி கும்பலைப் ''பரிவு''டன் அணுகத் துவங்கிவிட்டது. ஜெயா கைது செய்யப்படுவதற்கு முதல் நாளன்று அவரது முன் ஜாமீன் மனுக்களை நிராகரித்த நீதிபதி சிவப்பா பின்வருமாறு கூறினார்:

தொடர்ச்சி பக். 9



படிப்பகம்

www.padippakam.com

# வங்கதேசப் போர் வெள்ளி விழா:

## ஆக்கிரமிப்பு போரா? விடுதலைப் போரா?

## வரலாற்றின் இருண்ட பக்கங்களில் இருந்து சில உண்மைகள்

1971 டிசம்பர் 16-ம் நாள்! வங்க தேச விடுதலைப் போரில் இந்தியா வெற்றி வாகை சூடிய நாள்! மேற்கு பாகிஸ்தானின் அடக்குமுறைக்கு ஆளாகி இருந்த அன்றைய கிழக்கு பாகிஸ்தான், இந்தியாவின் உதவியோடு விடுதலையைச் சாதித்து, ''வங்க தேசம்'' என்ற புதிய நாடாக மலர்ந்த நாள்! இது வெறும் சம்பவமல்ல; சரித்திரம்! சாதனை!

- இப்படி 'தேசிய'ப் பத்திரிகைகள் அனைத்தும் வங்கதேசப் போர் வெற்றியின் 25-வது ஆண்டு நிறைவையொட்டி, அந்நாளை நினைவுகூர்ந்து பக்கம் பக்கமாக எழுதுகின்றன. பிரதமரும் இராணுவ அமைச்சரும் முப்படைத் தளபதிகளும் வங்கதேசப் போர் 'தியாகி'களின் நினைவிடத்தில் மலர் அஞ்சலி செலுத்துகின்றனர். அப்போரின்போது இந்தியத் தரைப்படைத் தளபதியாக இருந்த மானேக்ஷாவும், விமானப் படைத் தளபதியாக இருந்த நந்தாவும் இப்போது மீண்டும் கௌரவிக்கப்படுகின்றனர். ''ஈராயிரம் ஆண்டுகளில் இந்தியா இதுவரை கண்டிராத மிகப் பெரிய இராணுவ வெற்றியை இப்போரில் சாதித்தது. இந்தியாவின் பெருமையும் புகழும் உலக அரங்கில் மேலும் உயர்ந்தது'' என்று போர் சாகசங்களைப் பற்றி ஓய்வு பெற்ற இராணுவத் தளபதிகளும், குறும்படைத் தலைவர்களும் 'தேசிய'ப் பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதுகின்றனர்.

ஆனால்வங்கதேச விடுதலைப் போர் வெற்றியால் எந்தவொரு இந்தியக் குடிமகனும் பெருமை கொள்ள முடியாது. ஏனெனில், இது அப்பட்டமான மேலாதிக்க ஆக்கிரமிப்புப் போர். ஈழத்தில் இந்திய இராணுவம் ''அமைதிப் படை'' என்ற பெயரில் நுழைந்து ஆக்கிரமிப்பு அட்டூழியங்களில் ஈடுபட்டதைப் போலவே, 25 ஆண்டுகளுக்கு முன்பு இந்திய இராணுவம் வங்க தேசத்தைச் சூறையாடியது. இந்தியாவின் பிராந்திய மேலாதிக்க நோக்கத்துடன் - அகண்ட பாரதக் கனவுகளுடன் நடத்தப்பட்ட அநீதியான போர் தான் இது!

• • •

1960 -களின் இறுதியில், காங்கிரசை உடைத்து பாசிச இந்திரா செல்வாக்கிழந்து தனிமைப்பட்டிருந்த நேரம் அது. நாடாளுமன்றத்திலேயே சிறுபான்மை அரசாகத்தான் இந்திரா காங்கிரஸ் இருந்தது. தமது செல்வாக்கை உயர்த்திக் கொள்ளவும், அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ளவும் பாகிஸ்தானைத் துண்டாடி வங்கதேசத்தை உருவாக்கும் மிகப்பெரிய சதியில் இறங்கினார், இந்திரா.

அப்போது கிழக்கு பாகிஸ்தானில், இராணுவ வெறியாட்டத்தால் கொதிப்புற்ற மக்களுக்கு முஜிபுர் ரஹ்மான் தலைமையேற்று, மேற்கு பாகிஸ்தானிடமிருந்து சுயாட்சி உரிமைகோரிப் போராடி வந்தார். வங்காளிகளான கிழக்கு பாகிஸ்தானியர்கள் மேற்கு பாகிஸ்தானிலிருந்து முற்றிலும் வேறுபட்ட தனி தேசிய இனத்தவராவர். மேற்கு பாகிஸ்தானின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற அவர்கள் நடத்திய போராட்டம் நியாயமானது. ஆனால் இப்போராட்டத்தைச் சாதகமாக்கிக் கொண்டு, விடுதலைப் போராட்டத்தைச் சீரழித்து இந்திய மேலாதிக்கத்தின் கீழ், இந்திய விசுவாச ஆட்சியை கிழக்கு பாகிஸ்தானில் நிறுவுவது என்ற நோக்கத்துடன் இந்திரா கும்பல் சதிகளில் இறங்கியது.

1963-லேயே இந்திய உளவுப் படையான ஐ.பி.(I.B.) யின் தலைவராக இருந்த சங்கரன் நாயர் மூலம் முஜிபுர் ரஹ்மானின் ஆட்களுக்கு ஆயுத உதவி செய்து இந்திய அரசு உசுப்பி விட்டது. டாக்கா ஆயுதக் கிடங்கை முஜிபுர் ரஹ்மானின் குழுவினர் கொள்ளையிட முயன்று தோற்றனர். அகர்தலா சதி வழக்கில் இந்திய உளவுத் துறையின் பங்கு அம்பலமாகி, துணைக் கண்டமெங்கும் நாறியது.

பின்னர், பாகிஸ்தானில் நடைபெற்ற தேர்தலுக்கு பிறகு ஏற்பட்ட நெருக்கடியையும், மக்களது சர்வாதிகார எதிர்ப்புப் போராட்டங்களையும் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு மீண்டும் 1968-ல் வங்க தேசத்தை உருவாக்கும் சதிகளில் பாசிச இந்திராவும், ''ரா'' உளவுப் படையினரும் இறங்கினர். மீண்டும் சங்கரன் நாயர் தலைமையில் கொரில்லாக் குழுக்களும், உளவாளிக் குழுக்களும் கட்டியமைக்கப்பட்டன. பின்னாளில், ''முக்திபாகினி'' என்றழைக்கப்பட்ட முஜிபுரின் இராணுவத் தளபதியாக இருந்த கர்னல் ஓஸ்மானி, மேஜர் சைபுல்லா, ''புலி சித்திக்'' என்றழைக்கப்பட்ட அப்துல்காதர் சித்திக் ஆகியோருக்கு ''ரா'' நேரடியாகவே பயிற்சி அளித்தது.

1970-ல் முஜிபுர் ரஹ்மான் கைதானதைத் தொடர்ந்து வங்க தேசத்தில் மக்கள் போராட்டங்களில் இறங்கினர். வங்காளிகளான கிழக்கு பாகிஸ்தான் மக்கள் மீது உருது மொழி கட்டாயமாகத் திணிக்கப்பட்டதை எதிர்த்து மொழியுரிமை-சுயாட்சி உரிமைப் போராட்டங்கள் தீவிரமடைந்தன. அதைத் தொடர்ந்து முஸ்டாக் அகமது என்பவர் தலைமையில் வங்கதேச இடைக்கால அரசை நிறுவி, கல்கத்தாவிலுள்ள காங்கிரசு அலுவலகத்திலிருந்தே முஜிபுரின் ஆட்கள் அறிக்கைகளை வெளியிட்டனர். முஜிபுர் நிறுவியுள்ள ''முக்தி பாகினி'' படையின் போராளிகள் தமது சொந்த முயற்சியால் வங்க தேசத்தின் ஒரு பகுதியை விடுவித்து, இடைக்கால அரசை முஜிப் நகரில் அமைத்துச் செயல்படுவதாக இந்திய அரசும் 'தேசிய'ப் பத்திரிகைகளும் கூசாமல் புளுகின. ''ரா''வின் ஏஜெண்டுகளும் இரக்சிய கொலைக் குழுக்களும் முஸ்லிம்களைப் போல வேடமணிந்து வங்கதேசத்தில் (கிழக்கு பாகிஸ்தானில்) ஊடுருவி, பாலங்களைத் தகர்ப்பது, சொத்துக்களைச் சூறையாடுவது முதலான பயங்கரவாத நடவடிக்கைகளில் இறங்கினர். மறுபுறம், முஜிபுரின் துரோகத்தை எதிர்த்து, புதிய ஜனநாயகப் புரட்சிப் பாதையில் நாட்டை விடுதலை செய்ய ஆயுதமேந்திய மார்க்சிய - லெனினியப் புரட்சியாளர்கள் முன்னேறியபோது, அவர்கள் ''ரா'' ஏஜெண்டுக



அகண்ட பாரத கனவு நனவாகியது. வெற்றியைச் சாதித்த தரைப் படைத் தளபதி மானேக்ஷாவைப் பாராட்டும் பாசிச இந்திரா.





படிப்பகம்

www.padippakam.com

ளால் இரக்சியமாகக் கொன்றொழிக்கப்பட்டனர்.

கிழக்கு பாகிஸ்தானில் மக்களது சர்வாதிகார எதிர்ப்புப் போராட்டம் தீவிரமானதும், மேற்கு பாகிஸ்தானின் ஆட்சியாளர்கள் இராணுவத்தைக் குவித்து, கடும் அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டனர். அடக்குமுறைக்கு அஞ்சிய கிழக்கு பாகிஸ்தானிய மக்கள் இந்தியாவின் மே. வங்கம், அசாம், திரிபுரா மாநிலங்களில் அகதிகளாக வந்து குவியத் தொடங்கினர். அகதிகளில் இளைஞர்கள் பலர் முக்தி பாகினி படையைச் சேர்ந்தவர்கள் என்று கூறி, அவர்களுக்கு ஆயுதப் பயிற்சி கொடுத்து, அவர்களை முன்னிறுத்தி இந்திய உளவுப் படையினர் கிழக்கு பாகிஸ்தானில் ஊடுருவி பயங்கரவாத சதி நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். பின்னர் அகதிகள் பெருக்கத்தைக் காரணம் காட்டியும், மேற்கு பாகிஸ்தானின் போர்வெறி அச்சுறுத்தலை முறியடிப்பது என்ற பெயரிலும், அண்டை நாட்டின் விடுதலைக்கு உதவுவது என்றும் கூறிக் கொண்டு இந்திய இராணுவம் 1971 டிசம்பர் 3-ம் நாளன்று கிழக்கு பாகிஸ்தான்மீது போர் தொடுத்தது. 12 நாட்கள் நடந்த இப்போரில் இந்தியா வெற்றி பெற்று மேற்கு பாகிஸ்தான் படைகளைச் சரணடையச் செய்ததும், டிசம்பர் 16ம் நாளில் வங்கதேசம் என்ற புதிய நாடு உருவாக்கப்பட்டது.

இந்திய அரசின் பலத்தையும் ஆதரவையும் கொண்டு முஜிபுர் ரஹ்மான் வங்க தேசத்தின் அதிபரானதோடு, மாபெரும் சுதந்திரப் போராட்ட வீரராகச் சித்தரிக்கப்பட்டார். இந்தியத் தரகுப் பெருமுதலாளிகளின் தொழிலுக்கும் வர்த்தகத்துக்கும் ஆதிக்கத்துக்கும் புதிய வாய்ப்புகள் பெருகியதால், இந்திய ஆளும் வர்க்கங்கள் இந்திராவை உச்சிமுகர்ந்து பாராட்டின. விடுதலைக்குப் பாடுபட்ட வீராங்கனையாகச் சித்தரிக்கப்பட்ட அவரது செல்வாக்கு பெருகி, 'அன்னை இந்திரா' என்றழைக்கப்பட்டார். வங்க தேசப் போருக்குப் பிறகு நடந்த இந்தியப் பொதுத் தேர்தலில் பாசிச இந்திரா கும்பல் பெரும் வெற்றியைச் சாதித்தது. ஆனால் இந்தியாவின் தயவில் ஆட்சிக்கு வந்த முஜிபுர் ரஹ்மான், வங்க தேசப் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியாமல், ஒரு கட்சி சர்வாதிகாரத்தைக் கொண்டு வந்து, பின்னர் நடந்த ஆட்சிக் கவிழ்ப்பில் சுட்டுக் கொல்லப்பட்டார். இராணுவத் தளபதி ஜியாவுர் ரஹ்மான் வங்கதேசத்தின் அதிபரானார்.



வங்கதேசத் தலைநகர் டாக்காவில் இந்தியப் படைகளை வழியனுப்பும் விழாவில் கைக்கூலி அதிபர் முஜிபுர் ரஹ்மான்

• • •

வங்க தேசப் போரானது, இந்தியாவின் மேலாதிக்க நோக்கங்களுக்காக மட்டுமின்றி, ரஷ்ய மேலாதிக்க வல்லரசின் சனல் தேவைக்காகவும் நடத்தப்பட்டது. அன்றைய கிழக்கு பாகிஸ்தான் சனல் விளையும் வளமான பூமியாகும். ஆனால் சனல் இழை-சாக்கு தயாரிப்பு ஆலைகள் பெருமளவில் இந்தியாவில்தான் இருந்தன. அன்று ரஷ்யாவின் தொங்கு சதையாக இருந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் சனல் தேவையை ஈடுசெய்ய, கிழக்கு பாகிஸ்தானை தமது உற்பத்திப் பின்னிலமாக மாற்றிக் கொண்டு ஆதிக்கம் செய்ய வேண்டிய அவசியமும் ரஷ்யாவுக்கு இருந்தது. எனவேதான் தெற்காசியாவில் தனது விசுவாசக் கூட்டாளியும், பிராந்திய வல்லரசுமான இந்தியாவை அது கொம்பு சீவி விட்டது. வங்க தேசத்தில் விசுவாச பொம்மையாட்சியை நிறுவி மேலாதிக்கம் செய்வதன் மூலம் சனல் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் கொள்ளை இலாபம் ஈட்டுவதற்கான வாய்ப்பு பெருகும் என்பதால் இந்திய ஆளும் வர்க்கங்கள் அகண்ட பாரதக் கனவுடன் வங்க தேசப் போரை ஆதரித்தன. ஆளும் வர்க்கங்களின் நோக்கம், நாட்டின் இலட்சியமாக மாறி அனைத்து ஓட்டுக் கட்சிகளும் வங்கதேசப் போரை ஆதரித்து தேசிய வெறியூட்டின.

போலிக் கம்யூனிஸ்டுகளோ, மேலாதிக்க வெறிபிடித்த அநீதியான இப்போரை அம்பலப்படுத்தி முறியடிப்பதற்குப் பதிலாக, ரஷ்ய குரு பீடத்தின் கட்டளைப்படி, இப்போரை வெட்கமின்றி ஆதரித்தனர். "இந்திராவின் வெளியுறவுக் கொள்கைகள் முற்போக்கானது; உள்நாட்டுக் கொள்கைகள்தான் பிற்போக்கானது" என்று பித்தலாட்ட விளக்கம் அளித்துக் கொண்டு 'மார்க்சிஸ்டு' கட்சி பாசிச இந்திராவுக்குப் பல்லக்குத் தூக்கியது. வலது கம்யூனிஸ்டுகளோ, இந்திராவின் ஊதுகுழலாக மாறி அநீதியான இப்போரை ஆதரித்து நின்றதோடு, பின்னாளில் இந்திராவின் அவசர நிலை பாசிச ஆட்சியையும் ஆதரித்து காங்கிரசின் வாலாக மாறினர். அன்று வங்க தேச ஆக்கிரமிப்புப் போரை நக்சல்பாரி புரட்சியாளர்கள் மட்டுமே அம்பலப்படுத்தி எதிர்த்து நின்றனர்.

இப்போரின்போது, தனது நம்பகமான கூட்டாளி நாடான பாகிஸ்தான் துண்டாடப்படுவதை எதிர்த்த அமெரிக்கா, தனது ஏழாவது கப்பற்படையை இந்துமாக் கடலில் கொண்டு வந்து நிறுத்தி அச்சுறுத்தியது. ஆனாலும் விடுதலைப் போருக்கு உதவுவதாகக் கூறிக்கொண்டு இந்தியா கபட நாடகமாடியதாலும், மேற்கு பாகிஸ்தானின் சர்வாதிகாரத்துக்கு எதிராக வங்க தேச மக்கள் போராடி வந்ததாலும், இப்போரில் தலையிட்டால் மேலும் உலக அரங்கில் அம்பலப்பட்டு தனிமைப்பட நேரிடும் என்பதால் அமெரிக்க வல்லரசு தற்காலிகமாகப் பின்வாங்கிக் கொண்டது.

வங்கதேசப் போரின்போது, இந்திய இராணுவம் நடத்திய அட்டூழியங்களையும், சூறையாடல்-பாலியல் வன்முறைகளையும் விளக்குவதற்குப் பக்கங்கள் போதாது. ஈழத்தில் அமைதியை நிலை நாட்டச் செல்வதாகக் கூறிக்கொண்டு, தமிழச்சிகளை பாலியலண பலாத்காரம் செய்த இந்திய இராணுவம், வங்கதேசத்தில் எத்தகையதொரு வெறியாட்டத்தை நடத்தியிருக்கும் என்று சொல்லத் தேவையில்லை.

வங்கதேச ஆக்கிரமிப்புப் போர் பற்றிய பல உண்மைகள் இந்நாட்டு வரலாற்றின் இருண்ட பக்கங்களிலே புதைந்து கிடக்கின்றன. நடுநிலை நாயகன், சமாதான சிற்பி என்று ஓயாது பிரச்சாரம் செய்யப்படும் ஒரு பரம்பரையின் விரிவாக்க - மேலாதிக்க - ஆக்கிரமிப்பு வெறிகள் அவற்றிலே தெளிவாகத் தெரிகின்றன. இப்படிப்பட்ட வரலாற்று உண்மைகள் தொடர்ந்து மறைக்கப்படுவதால்தான் அண்டை நாடுகளுக்கு எதிராக தேசிய வெறியையும் பகைமையையும் தூண்டி ஆளும் வர்க்கங்கள் ஆதாயமடைய முடிகிறது. பாகிஸ்தான், வங்க தேசம், இலங்கை, மாலத்தீவு, நேபாளம் என அண்டை நாடுகள் அனைத்திலும் இந்தியாவின் விரிவாதிக்க-மேலாதிக்க-ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் நீடிக்கின்றன. இந்த உண்மைகளை உணர்ந்து, நாட்டு மக்களின் நலன்களுக்கு எதிரான இத்தகைய மேலாதிக்க வெறியை உழைக்கும் மக்கள் விழிப்புடன் இருந்து முறியடிக்க வேண்டிய தருணமிது.

• குமார்.



படிப்பகம்

www.padippakam.com

# விவசாயிகளின் எழுச்சி! தேக்கு பண்ணை அழிப்பு!

மதுரை மாவட்டம் போடியில், அனுபவ் பிளாண்டேசன் என்ற நிறுவனத்துக்குச் சொந்தமான பண்ணையில் வளர்ந்து நின்ற 6000 தேக்கு மரக் கன்றுகள் நவம்பர் 25-ந் தேதி அதிகாலையில் வெட்டிச் சாய்க்கப்பட்டன; போடி நகரில் அமைந்திருந்த அந்நிறுவனத்தின் அலுவலகம் சூறையாடப்பட்டு, நிலப்பத்திரங்களும் ஆவணங்களும் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன. 'இக்கொலை பாதக'ச் செயலைப் புரிந்ததற்காக, 115 விவசாயிகள் மீது கொலை முயற்சி உள்ளிட்ட ஒன்பது வழக்குகள் பதிவாகியுள்ளன. விவசாயிகள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த 10 தோழர்கள் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் தஞ்சைக்கு அடுத்த மிகவும் வளம் நிறைந்த பூமி கம்பம் பள்ளத்தாக்கு பகுதி. மேற்குத் தொடர்ச்சி மலை தரும் மிதமான தட்ப வெப்பத்தில், மண் வளமும் நீர் வளமும் நிறைந்த இப்பகுதியில் விளைந்த காய்களும் கனிகளும் தமிழகத்தின் தேவையை மட்டுமல்ல; அண்டை மாநிலங்களின் தேவையினையும் பூர்த்தி செய்து வருகின்றன. இந்த இயற்கை வளத்தை அப்படியே அந்நியனிடம் அடகு வைத்து விட்டு, அந்நியச் செலாணி சம்பாதிக்க புதிய விவசாயக் கொள்கையைப் புகுத்தியுள்ளனர், ஆட்சியாளர்கள்.

தேக்குப் பண்ணை, முந்திரிப் பண்ணை, பழம், காய்கறி என்ணெய்ப் பனை விவசாயம் - இவைதான் இன்று அரசின் பார்வையில் விவசாயம்.

அனுபவ் பிளாண்டேசன் சங்கராபுரம் - தேவாரம் - அப்பிபட்டி - எரசக்க நாயக்கனூர் பகுதிகளில் 1500 ஏக்கரில் தேக்குப் பண்ணை அமைத்துள்ளது; போடிக்கு அருகிலுள்ள முந்தல் மலைப் பகுதியில் 300 ஏக்கரில் ஏற்றுமதிக்காக காய்கறி பயிரிட்டுள்ளது. மேக்ஸ்வொர்த் 1000 ஏக்கரில் தேக்கையும் முந்திரியையும் பயிரிடுகிறது. வி.ஜி.பி. 300 ஏக்கரிலும், டான்பரோ 200 ஏக்கரிலும் தேக்கு மரங்களை வளர்த்து வருகின்றன. ரொடான்தே அக்ரோ லிமிடெட், கிரீன் கோல்டு, கிரீன் வாலி போன்று வெளிநாட்டு இந்தியர்களுக்குச் சொந்தமான நிறுவனங்களும் கம்பம் பள்ளத்தாக்கை நோக்கிப் படையெடுக்கின்றன. பரம்பரை பரம்பரையாக விவசாயம் செய்து வந்த விவசாயிகளைத் தூர எறிந்து விட்டு, ஒரு சில திடீர் பணக்காரர்களின் கரங்களில் கம்பம் பள்ளத்தாக்கு அடங்கிவிடும் அபாயம் எழுந்து விட்டது.

இடு பொருள்களின் விலையேற்றத்தால், "விவசாயம் செய்வதை விட சும்மா இருப்பதே மேல்" எனத் தடுமாறி நிற்கும் சிறு விவசாயிகள்தான் இந்நிறுவனங்களின் முதல்குறி. சிலர் நிறுவனங்களின் ஆசை வார்த்தைகளுக்கு மயங்கினர்; மயங்காதவர்கள் மிரட்டப்பட்டனர். பஞ்சம் பொழைக்க நகரங்களுக்குச் சென்று விட்டவர்களின் நிலங்களை, மோசடிக் கையெழுத்துப் போட்டு வளைத்துக் கொண்ட இந்நிறுவனங்கள். புறம் போக்கு நிலங்களையும் விட்டு விடவில்லை. இப்படித்தான் இவர்களின் கரங்களில் நிலங்கள் குவிந்தன.

பண்ணையை அமைத்துக் கொண்ட பின்னர், அதன் வழியே ஓடும் சிற்றோடைகளைத் தடுத்தனர்; பண்ணைக்குள் 300, 400 அடி ஆழத்துக்கு ஆழ் துளைக் கிணறுகளைப் போட்டு, பண்ணையைச் சுற்றியிருந்த நிலங்களை வறண்டு போகச் செய்தனர். இதையே காரணமாகச் சொல்லி, அந்த நிலங்களையும் வளைத்துப் போட்டுக் கொண்டன இந்த நிறுவனங்கள்.

பண்ணையைச் சுற்றி அமைக்கப்பட்ட மின்சார வேலிகள், மேயச் சென்ற ஆடு, மாடுகளைக் காவு கொண்டன. மலையடிவாரங்களில் விறகு பொறுக்குவதற்கு பண்ணையின் உள்ளே நுழைந்து செல்ல முடியாது; நான்கைந்து மைல்கள் சுற்றிக் கொண்டுதான் செல்ல முடியும். விவசாயமும் நசிந்து, ஆடு-மாடுகளும் இறந்து, விறகு வெட்டிக் கூடப் பிழைக்க முடியாத அவலத்தை உருவாக்கி, விவசாயிகளை சொந்த கிராமங்களை விட்டு துரத்தியடித்தன, இந்நிறுவனங்கள்.

இப் புதிய பண்ணைகளின் அட்டூழியங்களைப் பொறுத்துக் கொள்ள முடியாது பொங்கியெழுந்த சோலைநாயக்கன்பட்டி மக்கள், அனுபவ் கும்பலிடம் போராடி நீரோடையை மீட்டனர்; பாலார பட்டி மக்கள் மேக்ஸ்வொர்த் நிறுவனம் போட்டிருந்த மின் வேலியை உடைத்தெறிந்து, பெருமாள்பட்டி வழிப்பாதையை மீட்டனர்.

விவசாயிகளின் தன்னெழுச்சியான இப்போராட்டங்களை ஆதரித்த விவசாயிகள் விடுதலை முன்னணியினர் (விவிமு), அவர்கள் மத்தியில் கடந்த ஒரு வருடமாகவே இப்புதிய பண்ணைகளை எதிர்த்துப் பிரச்சாரம் செய்து வந்தனர். சுவரெழுத்து, துண்டு பிரசுரங்கள், மிதிவண்டி ஊர்வலம், தெருமுனைக் கூட்டம், பொதுக்கூட்டம் எனப் பல வடிவங்களில் இப்பிரச்சாரம் கொண்டு செல்லப்பட்டது. இப்புதிய விவசாயத்தையும், அதற்குப் பின்னுள்ள ஏகாதிபத்தியச் சுரண்டலையும் "விளைநிலத்தில் தேக்கு; விவசாயிகள் கழுத்துக்கு தூக்கு" எனும் சிறு வெளியீட்டில் அம்பலப்படுத்தியிருந்தனர்.

"உணவு உற்பத்தியை ஒழித்து நாட்டை மீண்டும் காலனியாக்கும் புதிய விவசாயத்தை நிறுத்து! பெரியார் அணையின் உயரத்தை 152 அடியாக உயர்த்து! 18-ம் கால்வாய் திட்டத்தை அமுல்படுத்தி ஒரு லட்சம் ஏக்கருக்கு பாசன வசதி ஏற்படுத்து" என முழங்கிய விவிமு-வுடன், அப்பகுதி விவசாயிகள் கைகோர்த்துக் கொண்டு, வட்டாட்சியர் அலுவலகம் முன் ஆர்ப்பாட்டத்தில் குதித்தனர். ஆனால் விவசாயிகளின் போராட்டங்களும், முழக்கங்களும் தமிழக அரசுக்கு செவிடன் காதில் ஊதிய சங்காகிப் போயின. எனவே தான் அனுபவ் பண்ணை அழிக்கப்பட்டது.

6,000 தேக்கு மரக் கன்றுகளை வெட்டிச் சாய்த்த விவசாயிகள் கொலை குற்றவாளிகள் என்றால், ஆயிரக்கணக்கான சிறு விவசாயிகளின், கூலி விவசாயிகளின் வாழ்வைச் சூறையாடி வரும் அனுபவ், மேக்ஸ் வொர்த், இன்ன பிற நிறுவனங்களை என்னவென்று அழைப்பது? வெட்டுண்ட மரத்திற்கு ஒரு நீதி; வாழ்விழந்த விவசாயிக்கு ஒரு நீதியா?

இப்போராட்டத்தின் பின், அனுபவ் சிறு பிரசுரமொன்றை வெளியிட்டுள்ளது. அதில் மழைக்காக மரம் வளர்க்க வேண்டிய அவசியம் பற்றி நீலிக் கண்ணீர் வடித்துள்ளது. மேலும், சில சாதித் தலைவர்களையும், ரெளடிகளையும் வி.வி.மு.க்கு எதிராகத் தூண்டிவிட்டு, பிரச்சினையைத் திசை திருப்ப முயன்று வருகிறது.

கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகள் எதிர்கொண்டு வரும் பிரச்சினை, நமது நாட்டைச் சூழ்ந்து வரும் அபாயத்தின் ஒரு பகுதி. உணவுப் பொருள் உற்பத்தியை அழித்து, சோமாலியாவையும் எத்தியோப்பியாவையும் போல நமது நாட்டையும் உணவுக்காக மேற்குலகிடம் கையேந்தச் செய்ய, ஏகாதிபத்தியங்களும் ஓட்டுக் கட்சிகளும் பின்னி வரும் சதிதான் இப்புதிய விவசாயம்.

எனவே, அனுபவ் அழிப்புப் போராட்டமானது கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகள் தங்கள் நலனுக்காக மட்டும் நடத்திய போராட்டமல்ல; அது சாராம்சத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராகும். நமது நாடு மீண்டும் காலனியாக்கப்படுவதை எதிர்த்து விவசாயிகள் தொடுத்த சமராகும். இப்போராட்டத்தை ஆதரிக்க வேண்டியது நாட்டுப் பற்றுக் கொண்ட ஒவ்வொருவரின் கடமையாகும்.



படிப்பகம்

www.padippakam.com

5-ம் பக்கத் தொடர்ச்சி

''நாட்டிற்கும், நாட்டின் பொருளாதாரத்திற்கும் எதிராக செய்யப்பட்டுள்ள இக்குற்றங்கள் மிகவும் கொடுமையான குற்றங்கள். விசாரணைகள் தற்போது தொடக்கநிலையில் உள்ளன. அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியது, சட்டங்களை மீறியது போன்ற குற்றச்சாட்டுகள் எழுந்தால், அவற்றை முழுமையாக விசாரிக்க புலனாய்வு அமைப்புகள் அனுமதிக்கப்பட வேண்டும். ஒருவருடைய தகுதி, செல்வாக்கு ஆகியவற்றை அரிதாகவே கணக்கில் கொண்டு, முன் ஜாமீன் வழங்குவதைப் பரிசீலிக்க வேண்டும் என்று உச்சநீதி மன்றமே கூறியுள்ளது.''

''ஜெயலலிதாவை ஜாமீனில் விட்டால் சாட்சியங்களைக் கலைப்பார்; ஆதாரங்கள் திரட்டுவதைத் தடுப்பார் என்ற அரசு தரப்பு வாதம் சரியே. அவருக்கு முன் ஜாமீன் கொடுப்பது போலீசுக் காவலில் வைத்து விசாரிப்பதைத் தடுத்துவிடும். போலீசுக் காவலைத் தேவைப்படும்போது பயன்படுத்த வேண்டியுள்ளது. வெளியே வைத்து விசாரித்தால் மனுதாரர் அதற்கு முட்டுக்கட்டை போடுவார். ஒருவருக்கு சுதந்திரம் அளிப்பது தேவைதான். ஆனால் உயர்மட்டத்தில் ஊழல் புரிந்தவர்கள் விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டியது அதைவிட முக்கியமானது.''

''அரசு தரப்பில் இதுவரை கிடைத்துள்ள ஆதாரங்களை வைத்துப் பார்க்கும்போது அரசியல் ரீதியில் பழிவாங்குவதற்காக இந்த வழக்குகள் பதிவு செய்யப்பட்டதாக முடிவுக்கு வரமுடியாது. ஜெயலலிதா தப்பிச் செல்லமாட்டார், மருத்துவச் சிகிச்சை தேவைப்படுகிறது, கைது செய்யத் தேவையில்லை, கைது செய்யப்பட்டால் அவருடைய கட்சிப் பணி பாதிக்கப்படும் ஆகியவை எல்லாக் குற்றவாளிகளும் தயாராக வைத்திருக்கும் பாதுகாப்புக் கேடயம்தான். அதிகாரம் தவறாகப் பயன்படுத்தப்பட்டது, அது பொதுநலனுக்கு பங்கம் விளைவித்தது, குற்றவாளி ஆதாயம் அடைந்தது ஆகியவை குறித்து விசாரிக்க வேண்டியுள்ளது.''



இராஜ மரியாதையோடு விசாரணைக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்

மேற்கண்டவாறு தீர்ப்பளித்த அதே நீதிபதி, பத்தாவது நாள், ஜெயாவின் கைதுக்குப் பிறகு ஜாமீன் மனுவை விசாரிக்கும்போது பின்வருமாறு கூறினார்: ''ஜெயலலிதாவுக்கு அளித்துள்ள பாதுகாப்பு போதுமானதல்ல; இதுவரை விசாரித்தது என்ன? இப்படிக் கைது செய்யப்பட்ட யாரையாவது ஒருவரைக் கூறுங்கள். மீண்டும் மீண்டும் அவரைக் கைது செய்யக் கூடாது. ஜெயலலிதா ஒரு கட்சியின் தலைவராக இருப்பதால் தேவையில்லாமல் அவரை சிறையில் வைத்தால் கட்சிக்கு மக்கள் மத்தியில் கெட்ட பெயர் ஏற்படும். சீக்கிரம் விசாரணையை முடியுங்கள்! இன்னும் எத்தனை நாளுக்குள் விசாரணையை முடிப்பீர்கள் என்று கூறுங்கள்!'' என்று நெருக்கியிருக்கிறார். ஜெயலலிதா உயிருக்குப் பாதுகாப்பில்லை என்றும், சசிகலாவுக்கு உடல்நிலை சரியில்லை என்றும் அவர்கள் நடிப்பதை அப்படியே நம்பி அக்கறையுடன் விசாரித்து உத்தரவு போடுகிறது நீதித் துறை.

இவையெல்லாம் அரசியல் கட்சிகள், புலனாய்வுத் துறை, நீதித் துறை வரை, ஜெயா - சசி கும்பலுக்குள்ள செல்வாக்கைக் காட்டுகின்றன. இந்தக் கும்பல், ஆட்சி இழப்பது நிச்சயமான உடனேயே மூன்று லாரி இரும்புப் பெட்டிகள் நிறைய கோடிகோடியாய் மதிப்புடைய நகைநட்டுகள் - அரிய பொருட்களைக் கடத்தி, சாராய உடையார், ஆந்திரப் புரட்சியாளர்களால் கொல்லப்பட்ட மொத்த சாராய வியாபாரி சுப்பராமி ரெட்டி குடும்பத்தினரிடம் கொடுத்துப் பதுக்கி வைத்துள்ளது. இப்படி கொள்ளைக் கும்பலை ஆதரித்து, அடைக்கலம் கொடுப்பதுகூட கடுமையான கிரிமினல் குற்றமாகும். இதற்கு எதிராக கருணாநிதியும், சிதம்பரமும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஜெயா-சசி கும்பலோ வழக்குகளில் இருந்து கவனத்தை திசை திருப்பவும், தம்மீது அனுதாபம் ஏற்படவும் கைதேர்ந்த நாடகமாடுகிறது. தாம் குற்றமேதும் புரியவில்லை, அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக பொய் வழக்குகள் போட்டு சிறையிலடைத்துத் துன்புறுத்தப்படுவதாக நாடகமாடுகிறது. முன்னாள் முதல்வரையும், சமூகத் தகுதியுடன் வாழ்ந்தவரையும் தனிமைக் கொட்டடியில் கிரிமினல் கைதிகளுடனும், புழு-பூச்சி, பெருச்சாளிகளுடனும் சேர்த்தடைத்துள்ளதாகக் குற்றஞ்சாட்டுகிறது.

''மற்ற கைதிகளைப் போலத்தான் இவர்களும் தண்டனையை அனுபவித்தே தீர வேண்டும்'' என்று கூறுவதற்குப் பதில் கருணாநிதி அரசு சட்டவிரோதமாக சிறையிலேயே சகல வசதிகளுடன் கூடிய சொகுசு வாழ்க்கை ஏற்பாடு செய்கிறது. பால், பழம், நெய் என்று விருந்துணவு; மின் விசிறி, மலை ஊற்று நீர், கட்டில் மெத்தை, சுடுநீர் குளியல் என்று வசதி செய்து தருகிறது. போதாக்குறைக்கு நட்சத்திர விடுதியிலிருந்து உணவு போன்றவையும் அனுமதிக்கிறது. மற்ற பிற கைதிகள் மூத்திரச் சட்டியுடன், பலரோடு அடைத்து வைக்கப்பட்டு கடுங்குளிரில் ஒரே போர்வையோடு தரையில் கிடக்கும்போது, அவர்கள் அனைவரையும் விட கடுமையான கிரிமினல் குற்றம் புரிந்துள்ள இவர்களுக்கு ஏன் இவ்வளவு வசதி!

இலஞ்ச-ஊழல் சொத்துக்களைக் கைப்பற்றவும், அவர்களை விசாரித்துத் தண்டிக்கவும் தனிச் சட்டம், தனி நீதி மன்றம் அமைக்கப் போவதாக கருணாநிதி கூறிவருகிறார். ஆனால் அப்போதும் ஜெயா-சசி கும்பலுக்கு இதே வசதி தரப்படும் என்று நம்புவதற்கு இடமுண்டு. இதைப் போன்ற கிரிமினல்களைத் தப்பவிப்பதற்கு என்றே எம்.எல்.ஏ., எம்.பி.க்கள், மந்திரிகள் மீது இலஞ்ச - ஊழல் வழக்குகள் போடுவதற்குத் தடை செய்யும் சட்டம் கொண்டு வர சர்வகட்சிகளும் தில்லியில் முயன்று கொண்டிருப்பதை கருணாநிதி கட்சி எதிர்க்கவில்லை. இதற்கு மாறாக இலஞ்ச-ஊழல் பேர்வழிகளுக்கு ஆதரவும் அடைக்கலமும் அளிப்பவர்களையும் தண்டிக்கும் சட்டம் கொண்டு வரவும், ''தடா'' சட்டம் போன்று அரசியல் கிரிமினல்களை ஒடுக்கவும் சொத்துக்களைப் பறிமுதல் செய்யவும், சிறப்புத் தகுதிகள் தராது கடுங்காவல் விதிக்குமாறு சட்டம் கொண்டு வர நடவடிக்கை எடுக்க கருணாநிதி கட்சி கோரவில்லை; இப்படிச் செய்யாதவரை அரசியல் ஆதாயத்தையே நோக்கமாகக் கொண்டு இவர்கள் செயல்படுகிறார்கள்; இலஞ்ச ஊழல் பேர்வழிகளைத் தண்டிப்பது இவர்கள் நோக்கமல்ல என்றே முடிவு செய்ய வேண்டும்.



படிப்பகம்

# ஊழல் புகையில் கோடிகள் மாயம்

அன்றாடம் சிகரெட் பிடிக்கும் வழக்கமுள்ளவர்கள் கட்டாயம் ஐ.டி.சி. (ITC) என்கிற பகாசுரக் கம்பெனிக்கு பணம் கொடுத்தாக வேண்டும். சிகரெட் உற்பத்தியில் ஏகபோகமாய் விளங்கும் இந்த இந்திய புகையிலை நிறுவனம் (ஐ.டி.சி.) தற்போது வேறு பல துறைகளிலும் இறங்கி, சர்வதேச அளவிலும் தனது கிளை நிறுவனங்களைத் துவக்கியுள்ளது. அதனுடைய இன்றைய மூலதன மதிப்பு ரூ. 5,100 கோடி.

ரூ. 350 கோடி ரூபாய் அந்நியச் செலாவணி மோசடி செய்ததாக இந்நிறுவனத்தின் முக்கிய அதிகாரிகள் 10 பேர் கைது செய்யப்பட்டு தற்போது பிணையில் வந்துள்ளனர். இதன் முன்னாள் தலைவர்கள் கே.எல். சக் மற்றும் ஜே.என். சாப்ரூவும் கைது செய்யப்பட்டு, நீண்ட நாள் கழித்து பிணையில் வெளிவந்தனர்.

இந்திய புகையிலை நிறுவனம் இந்தியாவில் நட்சத்திர விடுதிகளும் உணவு விடுதிகளும் நடத்தத் தொடங்கி வெற்றி பெற்றது. இதனடிப்படையில் 1989-ல் அமெரிக்காவிலுள்ள நியூயார்க்கில் இந்திய உணவு விடுதியைத் தொடங்கியது. அங்கிருந்த இந்திய மருத்துவர்களிடம் நிறைய இலாபப் பங்கு கிடைக்கும் எனக்கூறி பங்கு பத்திரம் மூலம் நிதி திரட்டியது. ஆனால் உணவு விடுதி பெருத்த நட்டமடைந்தது.

நிறுவனம் நட்டமடைந்தது வெளியே தெரிந்தால் கெட்ட பெயர் வரும் என்பதற்காக பத்திரங்களுக்கு இலாபப் பங்கு தர ஐ.டி.சி. திட்டமிட்டது. ஏற்கனவே ஐ.டி.சி.யின் பத்ராசலம் பேப்பர் கம்பெனிக்கு பழைய பேப்பர்களைக் கொடுத்து வந்த நியூஜெர்சியிலிருக்கும் சுரேஷ் சித்தாலியா, தேவாங் சித்தாலியா என்பவர்கள் மூலம் முதலீட்டாளர்களுக்கு இலாபப் பங்கு தந்தது. இதற்காக ஐ.டிசி. இவர்களுக்கு 40 லட்சம் டாலர்களைக் கொடுத்தது. இது முதல் அந்நியச் செலாவணி மோசடி. இதற்கு ரிசர்வ் வங்கியின் அனுமதி பெறவில்லை.

பின் 40 லட்சம் டாலர் எப்படிக் கிடைத்தது? தான் ஏற்றுமதி செய்யும் பொருட்களை மிகக் குறைந்த விலைக்கு சித்தாலியாக்கள் நடத்தும் நிறுவனங்களுக்கு அனுப்புவது. அவர்கள் சர்வதேச விலையில் (அதாவது கூடுதல் விலைக்கு) விற்று, கூடுதல் பணத்தை வைத்துக் கொள்வார்கள். அதேபோல ஐ.டிசி. வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யும்போது கூடுதல் விலைக்கு கணக்கெழுதி சித்தாலியா நிறுவனங்கள் மூலம் இறக்குமதி செய்வது. இதில் கிடைக்கும் அதிகப்படி டாலரை சித்தாலியாக்கள் எடுத்துக் கொள்வார்கள். இப்படி ஏற்றுமதி - இறக்குமதியில் அந்நியச் செலாவணி மோசடி செய்துள்ளனர்.

உணவு விடுதி நட்டத்தை ஈடுகட்ட சித்தாலியாக்களுடன் ஏற்பட்ட உறவு வேறு பல வழிகளிலும் தொடர்ந்தது. புதிய பொருளாதாரக் கொள்கையின் சலுகைகளைப் பெறவும் இந்த அந்நியச் செலாவணி மோசடி தொடர்ந்து நடத்தப்பட்டது. இப்படி நடந்த மோசடியின் விளைவாக சித்தாலியாக்களுக்கும் ஐ.டி.சிக்கும் கொடுக்கல் வாங்கலில் சிக்கல் ஏற்பட்டது. சித்தாலியாக்கள் ஐ.டி.சி.க்கு 1.6 கோடி டாலர் தர வேண்டும் என ஐ.டி.சி. அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தது. சித்தாலியாக்களோ 'தாங்கள் பணம் தரவேண்டியதில்லை. ஐ.டி.சி.தான் பணம் தர வேண்டும். தவிர தங்களை இழிவுபடுத்தியதால் மான நஷ்டமும் தர வேண்டும்' என சுமார் 5 கோடி டாலர் ஐ.டி.சி. தரவேண்டும் என எதிர் வழக்கு தொடுத்தனர்.

குதிரை கீழே தள்ளியது மட்டுமின்றி குழியையும் பறித்த கதையாக சித்தாலியாக்கள் இந்தியாவிலுள்ள அமலாக்கப் பிரிவு அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு, தமக்கு சட்டப் பாதுகாப்பு கேட்டுப் பெற்று, ஐ.டி.சி. நிறுவனத்தின் அந்நியச் செலாவணி மோசடியை ஆதாரத்துடன் காட்டிக் கொடுத்து விட்டனர். இதனடிப்படையில் அக்டோபர் 30-ல் தொடங்கி ஐ.டி.சி.யின் உயர் அதிகாரிகள் அனைவரும் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டனர். இதன் முன்னாள் தலைவர்களான சாப்ருவும், சக்கும் தான் இந்த மோசடிகளை நடத்தியவர்கள் என்பதால் அவர்களும் கைது செய்யப்பட்டனர். நாடு முழுதும் ஐ.டி.சி. நிறுவனங்களில் சோதனைகள் நடத்தப்பட்டன.

ஐ.டி.சி. நிறுவனம் இதுவரை 800 கோடி ரூபாய்க்கு வரி ஏய்ப்பு செய்துள்ளது என்ற வழக்கும் கடந்த ஒரு ஆண்டாக நடந்து வருகிறது.

• • •

ஷா வாலஸ் என்கிற சீமைச் சாராய உற்பத்தி செய்யும் ஒரு பகாசுரக் கம்பனியும் அந்நியச் செலாவணி மோசடியில் சிக்கியுள்ளது. அதன் மீதும் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்நிறுவனம் மோசடி செய்துள்ள மொத்த மதிப்பு ரூ.150 கோடி.

ஷா வாலஸ் நிறுவனத்திலுள்ள தொழிற்சங்கமே வழக்கு தொடுத்து, இந்த மோசடிகளை அம்பலப்படுத்தியுள்ளது. இதன் உரிமையாளர் மனு சாஃப்ரியா என்கிற வெளிநாட்டு இந்தியர். மோசடியே மூலதனம் என்கிற அடிப்படையில் செயல்பட்டு திடீர்ப் பணக்காரராகிய இவர் இன்று இந்தியாவின் மிகப் பெரிய தொழிலதிபர்களில் ஒருவராவார்.


ஷா வாலஸ் தொழிற்சங்கத்தினரின் வழக்கே நிர்வாகத்தை மாற்ற வேண்டும் என்பதுதான். மோசடிகளால் இந்நிறுவனமே மூடப்படும் அபாயமுள்ளது என்றும் குற்றம் சாட்டியுள்ளனர்.

• • •

இந்த இரு அந்நியச் செலாவணி மோசடிகளைத் தொடர்ந்து 50 பெரிய தொழில் நிறுவனங்கள் சிறப்புக் கண்காணிப்பின் கீழ் வைக்கப்பட்டிருக்கின்றன.

1994-'95ல் இந்திய தொழில் நிறுவனங்கள் அந்நியச் செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டத்தை மீறியது

கைது செய்யப்பட்ட முன்னாள் ஐ.டி.சி. தலைவர் கே.எல்.சக்: ஐ.டி.சி. மோசடியின் மூலவர்.



www.padippakam.com



ரூ. 663 கோடி என்றிருந்தது. இது 1995-'96ல் ரூ.1447 கோடியாக உயர்ந்துள்ளது. மத்திய அதிகாரிகள் தமது அறிக்கையில் இதுவரை நடந்துள்ள வருமான வரி-சுங்கவரி ஏய்ப்பு மட்டும் ரூ.10,000 கோடி இருக்கும் என மதிப்பிடுகின்றனர்.

குறிப்பாக, புதிய பொருளாதாரக் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்ட பின் பொருளாதாரக் குற்றங்கள் அதிகரித்துள்ளன. உற்பத்தி முழுவதும் ஏற்றுமதியை நோக்கித் திருப்பி விடப்பட்டுள்ளது. தவிரவும் சர்வதேச அளவில் வியாபாரத்தை நடத்த ஊக்குவிக்கின்றனர்.

இந்நிலையில் அந்நியச் செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டம் நடைமுறைக்குப் பொருந்தாது என எல்லா முதலாளித்துவப் பத்திரிகைகளும் கூக்குரலிடுகின்றன. ஏற்கனவே மன்மோகன் சிங் தனதுகாலத்தில் அந்நியச் செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டத்தில் சில மாற்றங்களைக் கொண்டு வந்தார். அது போதாது. இச்சட்டத்தை முற்றாகத் திருத்த வேண்டும் என்கின்றனர் தரகு முதலாளிகள்.

தவிர 'தற்போது ஐ.டி.சி. மற்றும் ஷாவாலஸ் கம்பனிகள் மீது எடுக்கப்படும் நடவடிக்கைகள் இந்தியாவின் தொழிற்துறையையே சீர்குலைக்கிறது. வெளிநாட்டிலிருந்து ரூ.14000 கோடி ரூபாய் மூலதனம் போட உள்ள அந்நியக் கம்பெனிகள் தயங்குகின்றன. எனவே உடனடியாக அந்நிய செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டம் தளர்த்தப்பட வேண்டும்' என முதலாளித்துவ வல்லுநர்கள் வரிந்துகட்டி எழுதுகின்றனர். நமது சிதம்பரமும் அவசர அவசரமாகத் திருத்தி எழுதி வருகிறார்.

நமது வளத்தை நூற்றாண்டுகளாக ஆங்கிலேயன் சுரண்டிச் செல்கிறான். போலி சுதந்திரம் என்பது அம்பலப்பட்டு நாறத் தொடங்கிய போது, அதை மூடி மறைக்க அந்நியச் செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டம், ஏகபோகத் தடுப்புச் சட்டம் என மாய்மாலம் செய்தனர். தற்போது மீண்டும் மறுகாலனியாக்கும் புதிய பொருளாதாரக் கொள்கைக்கு இவை தேவையற்றவை என ஏகோபித்த குரலில் தரகு முதலாளிகள் எதிர்க்கின்றனர்.

எற்கனவே பிரிட்டிஷ்-அமெரிக்க புகையிலை நிறுவனத்தின் (BAT) இந்திய கிளையாயிருந்த இம்பீரியல் புகையிலை நிறுவனம் 1971க்குப் பின் இந்திய புகையிலை நிறுவனமாக (ஐ.டி.சி.) புது அவதாரமெடுத்தது. தற்போது இங்கிலாந்தின் பிரிட்டிஷ்-அமெரிக்க புகையிலை நிறுவனம் ஐ.டி.சி.யை மீண்டும் கைப்பற்ற முனைந்துள்ளது. அதற்கான நாடகத்தின் ஒரு பகுதி தற்போது அரங்கேறியுள்ளது. அந்நியச் செலாவணி கட்டுப்பாடு சட்டத்தை நீக்கி அடுத்த காட்சி அரங்கேறப் போகிறது. தரகு முதலாளிகள் கைதட்டி ஆரவாரிக்கக் காத்திருக்கின்றனர். • பாரி

## ஐ.டி.சி. மோசடியில் அதிகாரிகளின் பங்கு

அந்நியச் செலாவணி மோசடி நடந்துள்ள ஐ.டி.சி. நிறுவனத்தில் மத்திய அரசின் நிதி நிறுவனங்கள் மொத்த மூலதனத்தில் 32 சதவீதப் பங்குகள் வைத்துள்ளன. எனவே நிதி நிறுவன அதிகாரிகள் ஐ.டி.சி. நிறுவன நிர்வாகிகளாக (டைரக்டர்கள்) உள்ளனர். நிறுவனம் முக்கிய முடிவுகள் எடுக்கும்போது இயக்குநர்களுக்குத் தெரியாமல், அவர்களது சம்மதமின்றி முடிவெடுக்க இயலாது.

சித்தாலியாக்களுடனான உறவு, அவர்களின் மூலம் ஏற்றுமதி-இறக்குமதி, அதில் மோசடி - இதெல்லாம் நிர்வாகிகளாக உள்ள நிதி நிறுவன அதிகாரிகளுக்கு தெரிந்தே, அவர்களது ஆதரவுடனே அரங்கேறியுள்ளன. ஆனால் இன்றைக்கு இந்த அதிகாரிகள் தமக்கு எதுவும் தெரியாது எனக் கைவிரித்துவிட்டனர். அமலாக்கப் பிரிவு அதிகாரிகளும் அவர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்த அதிகார வர்க்க முதலாளிகள் எவ்விதச் சிரமமுமின்றி கோடிக்கணக்கில் நமது செல்வங்களைச் சூறையாடுகின்றனர். போபர்ஸ் பீரங்கி பேர ஊழலில் ராஜீவ் பெயர்தான் வெளி வந்தது - சம்பந்தப்பட்ட அதிகார வர்க்க கும்பல்கள் தப்பிவிட்டன. இன்னும் நாட்டை உலுக்கிய பல மோசடிகளிலும் இந்த அதிகார வர்க்க கும்பல்கள் மீது எவ்வித நடவடிக்கையுமில்லை.

## இடுகுழி வெட்ட மறுத்த தாழ்த்தப்பட்டவர் மீது கவுண்டர்களின் தாக்குதல்!

கோவைக்கு அருகிலுள்ள தெற்கு பாளையம் கிராமத்தில் வசித்து வரும் வெள்ளைச்சாமி, சக்கிலிய சாதியைச் சேர்ந்தவர். குரும்பக் கவுண்டர் சாதியைச் சேர்ந்த குப்பண்ணக் கவுண்டரின் தாயார் 22.11.96 அன்று அக்கிராமத்தில் இறந்து போனார். வெள்ளாளக் கவுண்டர் சாதியைச் சேர்ந்த செல்வராஜ், வேலுச்சாமி, பழனிச்சாமி - இம்மூவரும் வெள்ளைச்சாமியிடம் வந்து, மயானத்தில் குழி வெட்டும்படிக் கூறினர். அதற்கு வெள்ளைச்சாமி மறுத்துவிடவே, அம்மூவருக்கும் மேல் சாதி வெறி தலைக்கேறிக் கொண்டது. "குழி வெட்டலைன்னா ஊருக்குள் எந்த சக்கிலி நாய்களும் குடியிருக்கக் கூடாது" என மிரட்டிச் சென்றனர்.

இம்மிரட்டலுக்குப் பயந்துபோன வெள்ளைச்சாமி, தன்னுடன் மூவரை அழைத்துக் கொண்டு சென்று இடுகுழி வெட்டிக் கொடுத்தார். ஆனாலும் சாதி வெறிகொண்ட அம்மூவரும் பேசிய பணத்தை (ரூ. 250/-) தராமல், நூற்றைம்பதை மட்டும் கொடுத்துவிட்டு, மீதியை பிறகு வாங்கிக் கொள்ளலாம் என சாக்கு போக்கு சொல்லி அமுக்கிக் கொண்டனர். இம்மூவரின் திருட்டுத்தனம் குரும்பக் கவுண்டருக்குத் தெரியாது.

இரு நாட்கள் கழித்து, அம்மூவரும் வெள்ளைச்சாமி கூலியைக் கறாராகக் கேட்டதை மனதில் வைத்துக் கொண்டு, நடுரோட்டிலேயே அவரை வீண் வம்புக்கு இழுத்தனர். சாதி பெயரைக் கூறி இழிவாகப் பேசியதோடு, வெள்ளைச்சாமியை கீழே தள்ளி செருப்புக் காலால் மிதித்துத் தாக்கினர்; தடுக்க வந்த கனகராஜ், வீரபத்திரன், ராஜா மூவரும் மேல் சாதி வெறியர்களால் தாக்கப்பட்டனர்.

இதனால் அக்கிராம தாழ்த்தப்பட்ட மக்கள் பாதுகாப்பு தேடி துடியலூருக்கு வந்தனர். மறுநாள் கோவை மாவட்ட போலீசு கண்காணிப்பாளரிடம் இச்சாதி வெறி தாக்குதல் பற்றி புகார் கொடுக்கப்பட்டது. எனினும், போலீசின் மெத்தனப் போக்காலும், தாழ்த்தப்பட்டவர்கள் பெயரைச் சொல்லி பிழைப்பு நடத்தும் துடியலூர் பகுதி தி.மு.க. பொறுப்பாளர் வேலுச்சாமியிடம் மேல்சாதி கவுண்டர்கள் தூது சென்றதாலும் குற்றவாளிகளைத் தண்டிக்க முடியாமல் போனது.

ஊர்ப் பொதுமக்கள் முன்னிலையில், மேல்சாதி வெறியர்களிடம், "தாழ்த்தப்பட்ட மக்களை மயானத்தில் குழி வெட்டுவது, செத்த மாட்டைத் தூக்குவது, பறை அடிப்பது போன்ற இழி தொழில்களைச் செய்யச் சொல்லி கட்டாயப்படுத்த மாட்டோம்" என எழுதி வாங்கிக் கொண்டு, இப்பிரச்சினை முடிக்கப்பட்டது.

தகவல்:
ம.க.இ.க., கோவை



படிப்பகம்

www.padippakam.com



அன்று ஆகஸ்டு-15. இந்த நாட்டின் சுதந்திர நாள். தொடர்ந்து நான்காம் நாள் பட்டினியில் சுருண்டு கிடக்கும் தனது இரண்டு மகன்களையும் வெறித்துப் பார்த்தபடியே தன் மனைவி துத்திக்காவிடம் சொன்னான் சிர்பச்சா பாகர்தி, "இரு. பக்கத்துக் காட்டுக்குப் போய் விறகு வெட்டிவிட்டு வருகிறேன். ஒருவேளை வயிற்றுக்காவது வழியைப் பார்ப் போம்."

அப்போது போனவள்தான் - திரும்பி வரவே இல்லை. அடுத்த நாள், இடுப்புத் துணியை அவிழ்த்து ஒரு மரத்தில் தூக்குப் போட்டுக் கொண்டு தொங்கிய அவன்

அனாதைகளாக விடப்படும் முதியோர்களும் பெண்களும் சிறுவர்-சிறுமிகளும் பல நாட்கள் பட்டினி கிடந்து சிறுக சிறுக செத்து மடிகின்றனர். இன்று நேற்றல்ல; கடந்த பத்தாண்டுகளாக இதே நிலைதான். காட்டு கிழங்குகளையும், இலைதழைகளையும், காட்டுக் கனிகளையும், அவற்றின் கொட்டைகளையும் - கிடைத்தால் உண்டு உயிர்வாழ முயலுகின்றனர். வறட்சியில் காடுகளும் நிலங்களும் தீய்ந்து போய்க் கிடப்பதால் இப்போது அவையும் அருகி வருகின்றன. வெளி மாநிலங்களில் ஆண்கள் கொத்தடிமைகளாகவும், பெண்களும் சிறுவர்களும் வீட்டு அடிமைகளாகவும் விற்கப்படுகின்றனர்.



படிப்பகம்

## முடியவில்லை”

## சடங்காவது செய்!”

பிணத்தைதான் கிராமத்து மக்கள் கண்டார்கள். இனி, துத்திக்காவின் அவளுடைய இரண்டு சிறுவயது மகன்களின் நிலை என்ன?

“பல மாதங்களாக மழை இல்லை. நிலத்தில் வேலையும் இல்லை. எவ்வளவோ நாள் பட்டினி. ஏதோ பிச்சையெடுத்துச் சமாளித்து வந்தோம். புருசனும் தற்கொலை செய்துகொண்டான். சில வீடுகளுக்கு வெறட்டித் தட்டிக் கொடுத்து, கஞ்சி வாங்கிக் குடித்து எப்படியோ காலத்தைத் தள்ளுகிறேன். அரசாங்கம் அறிவித்த நிவாரணத் திட்டங்களும் வந்தபாடில்லை. மூத்த பையனும் நோயாளியாகி விட்டான். நானும் தினம் தினம் பலவீனமாகி வருகிறேன்.” - இப்படிச் சொல்லும் துத்திக்காவின் கண்களில் வெறுமையும் இருளும் கப்பிக் கொண்டிருக்கிறது.



போனிதா போத்-தொடரும் கொத்தடிமை வாழ்வு

தொடர்ந்து புயல், மழை, வெள்ளத்தினால் ஆந்திரா, தமிழக மக்கள் பலர் தமது உடைமைகளையும் உயிர்களையும் இழந்து தவித்துக் கொண்டிருக்கிறார்கள். இதே சமயம் ஆந்திராவை ஒட்டியுள்ள ஒரிசாவின் தென்மேற்கு எல்லைப் புற மாவட்டங்களான கலகாந்தி, கோரா புட், போலாங் கீர், நவ பாடா, சோனேபூர், பௌத் ஆகிய ஆறையும் வறட்சி வாட்டிக் கொண்டிருக்கிறது.

ஒரிசாவின் நிலைமையை “ஒரு தேசியப் பேரழிவு” என்று மத்திய அரசு அறிவித்திருக்கிறது. ஆந்திராவின் புயலைவிட மிக மோசமான பாதிப்பு நிலைமை ஒரிசாவில் நிலவுவதாக மத்திய விவசாய மந்திரி ஒப்புக் கொண்டிருக்கிறார். சிர்பாச்சா-துத்திக்கா குடும்பத்தைத் தாக்கிய பஞ்சமும்-பட்டினிச் சாவுகளும் பல ஆயிரம் குடும்பங்களின் வாழ்க்கையை சின்னாபின்னப்படுத்தி விட்டுள்ளன. ஏறக்குறைய பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட கிராமங்கள் பாலைவனமாகிவிட்டன. இதுவரை நூற்றுக்கணக்கானோர் பட்டினிச் சாவுக்குப் பலியாகிவிட்டதாக மத்திய அமைச்சரே ஒப்புக் கொண்டுள்ளார்.

காடுகளில் விறகுவெட்டி அந்த வழியே போகும் இரயில்கள், சாலை வாகனங்களில் சொற்பக் காசுக்கு விற்கின்றனர். அதுவும் தொடரமுடியாமல் அரியானா-பஞ்சாபில் செங்கற் சூளைகளிலும், மும்பை தெருக்களிலும் வேலை தேடி இலட்சக்கணக்கான பேர் இரயிலேறி ஓடுகின்றனர். “பெண்களும் சிறுவர்களும் பிடிபடாமல் இருந்தால் விறகு வெட்டி எப்படியோ பிழைத்துக் கொள்வார்கள்” என்று சொல்லிவிட்டு இரயில் ஏறும் ஆண்களையும் கீழே இறக்கி விரட்டிவிட்டு இரயில் நிலையங்களும் இழுத்து மூடப்படுகின்றன. பிழைப்புக்காக இடம்பெயரும் உரிமையும் அவர்களுக்கு மறுக்கப்படுகிறது.

இப்படித்தான், பத்தாண்டுகளுக்கு முன்பு பஞ்சம்-வறுமையின் தாக்குதலைத் தாள முடியாமல் நாற்பது ரூபாய்க்கு போனிதா போத் என்ற 15 வயது சிறுமி விற்கப்பட்ட செய்தி வந்தது; அப்போதைய பிரதமர் ராஜீவ் காந்தி பெருங்கூச்சல் போட்டார். ராஜீவே நேரில்போய், விசாரித்து மாதம் 200 ரூபாய்க்கு ஒரு பால்வாடியில் போனிதாவுக்கு “ஆயா” வேலை கிடைக்கும்படி உத்திரவுபோட வைத்தார். அவ்வளவுதான். அவளை எல்லோருமே மறந்து போனார்கள். இப்போது 25 வயதாகும் அந்தப் பெண் தனது குருட்டுக் கணவனுக்கும் நான்கு குழந்தைகளுக்கும் உழைத்துப் போடக் கொத்தடிமையாகிப் போனாள்.

ஆந்திரா, மராட்டியம், மத்தியப் பிரதேசம், பீகார் என்று பட்டினிச் சாவுகள் பரவிக் கொண்டுதானிருக்கின்றன. ஆனால் ஒரிசாவில் நீண்ட காலமாகவும் நிரந்தரமாகவும் அவை தொடருகின்றன. முக்கியமான காரணம் இப்போதும் அங்கே நிலங்களைக் குவித்து வைத்துக் கொண்டிருக்கும் மிட்டாமிராசுகளும், ஜமீன் நிலப்பிரபுக்களும், மற்ற பிற மாநிலங்களில் உள்ளவர்களைப் போல, ஓரளவுக்குக்கூட விவசாயத்தை நவீனப்படுத்தவில்லை.



காய்ந்துபோன தங்கள் வயல்களின் வழியே ஊரை விட்டு வெளியேறும் கஜ்ராஜ்புர் விவசாயிகள்

மேலும் ஒரிசாவின் வளமான கடலோர மாவட்டங்களில் உள்ள அரசியல் தலைவர்கள் தான் அதிகாரத்தில் ஆதிக்கம் செலுத்துகின்றனர். மிகப் பெரிய நீர்ப்பாசனப் பெருக்குத் திட்டங்கள் எதுவும் கிடையாது. வளமான உலோகச் சுரங்கங்களில் இருந்து கச்சாப் பொருட்களைக் கொள்ளையிடுவதைத் தவிர ஆலைத் தொழில்கள் எதுவும் இல்லை.

இந்திரா-ராஜீவ் காந்தி காலத்தில் இருந்து அந்தப் பஞ்சபூமியைப் பார்வையிட்டு வாக்குறுதிகள் வழங்குவதே சடங்காகிவிட்டது. அதன்பிறகு நாடு ஐந்து பிரதமர்களைக் கண்டு விட்டது. ஒரிசாவிலும் காங்கிரசு, ஜனதா, காங்கிரசு என்று பட்நாயக்குகளின் ஆட்சி வந்துபோகின்றன. நிவாரணத் திட்டங்களை மாறிமாறி அறிவிக்கின்றனர். ஆனால் நிலைமை மாறவில்லை. மோசமாகித்தான் வருகிறது. பட்டினிச் சாவுகள் தொடர்கதையாகி விட்டன.

1985 இல் கலகாந்தி பட்டினிச் சாவுத் துயரை உலகுக்குக் கொண்டுவந்தவர் கபில் நாராயண் திவாரி என்ற சீர்திருத்த சோசலிசவாதி. இப்போது ஆத்திரம் பொங்க அரசு நிர்வாகத்திடம் கோருகிறார்: “மனிதர்களுக்கு சோறுதான் தரமுடியவில்லை. செத்துப் போகிறவர்களுக்கு மரியாதையானதொரு இறுதிச்சடங்காவது ஏற்பாடு செய்யுங்கள்!”.

• ஆர்.கே.

www.padippakam.com



## கோர்க்காலாந்து விவகாரம்: 'மார்க்சிஸ்ட்' கட்சியில் பிளவு

கோர்க்காலாந்து பிரச்சினையையொட்டி, மே. வங்க 'மார்க்சிஸ்டு' கட்சிக்குள் முரண்பாடுகள் முற்றி, அக்கட்சியின் டார்ஜிலிங் மாவட்டக் கமிட்டி பிளவுபட்டுப் போயுள்ளது. கோர்க்காலாந்து தனி மாநிலக் கோரிக்கையை ஆதரித்த 'குற்றத்திற்காக', டார்ஜிலிங் வட்டாரத்தைச் சேர்ந்த ஆர்.பி.ராய், தவாங் தாவா லாமா ஆகிய 'மார்க்சிஸ்டு' எம்.பி.க்கள் கட்சியிலிருந்து தற்காலிக நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இதைத் தொடர்ந்து, டார்ஜிலிங் மலை மாவட்ட 'மார்க்சிஸ்ட்' கட்சியினரும், அதன் மக்கள் திரள் அமைப்பினரும் கடந்த டிசம்பர் 14 அன்று ஒட்டுமொத்தமாக 'மார்க்சிஸ்ட்' கட்சிக்கு முழுக்குப் போட்டு விட்டனர். ''புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)'' என்ற பெயரில் அவர்கள் புதிய கட்சியையும் தொடங்கியுள்ளனர். டார்ஜிலிங் மலை மாவட்டத்தோடு சிலிகுரி, தெராய், தோவார்ஸ் வட்டாரத்தின் சில பகுதிகளையும் உள்ளடக்கி கோர்க்காலாந்து எனும் தனி மாநிலம் அமைக்கப்பட வேண்டும் என்பதை இவர்கள் தமது இலட்சியமாக அறிவித்துள்ளனர்.

உத்திரப் பிரதேசத்தின் வடக்கே பார்ப்பனர் மற்றும் மேல் சாதியினரின் உத்தர்கண்ட் தனி மாநிலக் கோரிக்கையை ஏற்பதாக பிரதமர் தேவே கௌடா அறிவித்துள்ளதைத் தொடர்ந்து, கூர்க்காக்களும் தனி மாநிலக் கோரிக்கையை முன் வைத்து மீண்டும் போராடத் தொடங்கியுள்ளனர். 1988-ல் கோர்க்காலாந்து போராட்டம் தீவிரமடைந்த போது, அதைக் கடுமையாக ஒடுக்கிய 'மார்க்சிஸ்டுகள்' 'பின்னர் பாசிச ராஜீவுடன் சேர்ந்து போராட்டத்தை நீர்த்துப் போகச் செய்து' நிறுவனமயமாக்கும் தரகு வேலையில் ஈடுபட்டனர். சமரச - துரோக ஒப்பந்தத்தைத் திணித்து கூர்க்காக்களின் டார்ஜிலிங் மலை மாவட்டக் கவுன்சிலை உருவாக்கினர். கடந்த பத்தாண்டுகளாக, மாவட்ட வளர்ச்சிக் கவுன்சில் எனும் அற்பச் சலுகையால் எந்தப் பயனும் இல்லை என்பதை உணர்ந்து கொண்ட கூர்க்காக்கள், இப்போது மீண்டும் தனி மாநிலக் கோரிக்கையுடன் போராடக் கிளம்பி விட்டனர். உடனே, இது பிரிவினைவாதம், தேசிய ஒருமைப்பாட்டுக்கு எதிரானது என்று ஆளும் வர்க்கங்களோடு சேர்ந்து 'மார்க்சிஸ்டு'களும் பீதியூட்டி வருகின்றனர். வங்காள இனவெறியைத் தூண்டி, கூர்க்காலாந்து போராட்டத்தைத் தனிமைப்படுத்தித் தாக்க முயற்சிக்கின்றனர்.




கட்சியின் முடிவை மீறி கோர்க்காலாந்து போராட்டத்தை ஆதரித்து டார்ஜிலிங்கில் பேரணி நடத்தும் 'மார்க்சிஸ்ட்' கட்சியின் இளைஞர் அமைப்பினர்.

கடும் உழைப்பாளிகளான கூர்க்காக்கள் நாடற்றவர்களாக நடத்தப்படுகின்றனர். வட கிழக்கிந்திய மாநிலங்களில் அவர்களுக்குக் குடியுரிமை மறுக்கப்படுகிறது. வங்காளிகளால் அடக்கியொடுக்கிச் சுரண்டப்படுகிறார்கள். எனவே தமது ஜனநாயக உரிமைக்காகவும், சுயநிர்ணய உரிமைக்காகவும் கூர்க்காக்கள் நடத்தும் போராட்டம் நியாயமானது. அதே சமயம் கூர்க்காக்கள் போராட்டம், குட்டி முதலாளித்துவ வர்க்கத் தலைமையின் காரணமாக ஊசலாடுவதும் ஆளும் கும்பலுடன் சமரசமாகிப் போவதும் தொடரவே செய்கிறது.

கோர்க்காலாந்து பிரச்சினை மட்டுமல்ல; நாட்டின் எந்தவொரு ஒடுக்கப்பட்ட தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தையும் எதிர்ப்பது என்பதுதான் 'மார்க்சிஸ்டு'களின் கேடு கெட்ட கொள்கையாக உள்ளது. தேசிய ஒருமைப்பாடு என்ற பெயரில் பிரிவினைவாத பீதியூட்டி அடக்குவதில் காங்கிரசு, ஜனதா தளம், பாரதீய ஜனதா ஆகிய ஆளும் வர்க்கக் கட்சிகளுக்கும் போலி கம்யூனிஸ்டுகளுக்கும் அடிப்படையில் எந்த வேறுபாடும் கிடையாது. கோர்க்காலாந்து பிரச்சினையையொட்டி 'மார்க்சிஸ்டு' கட்சிக்குள் ஏற்பட்டுள்ள பிளவும் மோதலும் இந்த உண்மைகளை மீண்டும் நிரூபித்துக் காட்டி விட்டன.

## ஊருக்கு உபதேசம் செய்துவிட்டு உல்லாசத்தில் மிதக்கும் போலிகள்

பிரதமர் தேவே கௌடா தனது குடும்பத்தினருடன் அரசு செலவில் வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டதை விமர்சிக்கப் போய் இப்போது ஆப்பசைத்த குரங்காக 'மார்க்சிஸ்டு'கள் மாட்டிக் கொண்டு முழிக்கிறார்கள். கடந்த நவம்பர் மாதத்தில் பிரதமர் தனது குடும்பம் - உற்றார் உறவினர், நண்பர்கள் புடைசூழ ஹராரேயில் நடந்த ஜி-15 நாடுகளின் மாநாட்டுக்கும், ரோம் நகரில் நடந்த உலக உணவு மாநாட்டுக்கும் உல்லாசப் பயணமாகச் சென்று வந்தார். இப்படி 15-க்கும் மேற்பட்ட உறவினர்களுடன் பெருங்கும்பலாகச் சென்றால் அரசு செலவு அதிகரிக்காதா? தன்னை ஒரு எளிமையான விவசாயி என்று கூறிக் கொள்ளும் பிரதமர் இப்படி அரசு பணத்தைப் பாழடிக்கலாமா? என்று 'மார்க்சிஸ்டு' எம்.பி.யான சீத்தாராம் எச்சூரி நாடாளுமன்ற மேலவையில் கேள்வி எழுப்பினார்.

உடனே காங்கிரசு எம்.பி.யான பிரியரஞ்சன்தாஸ் முன்ஷி, ''நீங்கள் மட்டும் யோக்கியமா? மே.வங்க மார்க்சிஸ்டு முதல்வரான ஜோதிபாசு தனது குடும்பத்துடன் விடுமுறையை உல்லாசமாகக் கழிக்க இலண்டனுக்கும் அமெரிக்காவுக்கும் ஒரு மாத காலம் சுற்றுப் பயணம் செல்லவில்லையா? இது பற்றி விசாரணை அறிக்கை வேண்டுமென'' கிடுக்கிப்பிடி போட்டார்.

இத்தாக்குதலைக் கண்டு அரண்டு போன 'மார்க்சிஸ்டு' செயலாளரான சுர்ஜித், ''எச்சூரியின் கருத்து கட்சியின் கருத்து அல்ல; அவரது விமர்சனத்தை வைத்து இதை ஒரு பிரச்சினை ஆக்க வேண்டாம்'' என்று தமது வண்டவாளங்கள் அம்பலமாகாதிருக்க எதிர்த்தரப்பினரைச் சமரசப் படுத்தினார்.

மே.வங்க முதல்வர் ஜோதிபாசு மட்டுமல்ல; கேரள 'மார்க்சிஸ்டு' முதல்வர் நாயனாரும், அவரது அமைச்சரவை சகாக்களும் கடந்த ஆறு மாதங்களில் 5 முறை தமது குடும்பத்துடன் ஐரோப்பா மற்றும் வளைகுடா நாடுகளுக்கு உல்லாசப் பயணம்



படிப்பகம்

www.padippakam.com




சென்று வந்துள்ளார்கள். இப்பயணங்களால் அரசுப் பணம் ரூ. 15 கோடி பாழடிக்கப்பட்டுள்ளது.

கேரளத்திலும், மே. வங்கத்திலும் அந்நிய மூலதனங்களைப் பெருக்கும் நோக்கத்துடன்தான் வெளிநாடுகளுக்குப் பயணம் செய்ததாக இப்போலிக் கம்யூனிஸ்டுகள் கூறினாலும், இப்பயணங்களில் மாநிலத் தொழிலமைச்சர் பங்கேற்காததால், இவை வெறும் உல்லாசப் பயணங்கள்தான் என்று நிரூபணமாகி விட்டன. மேலும் அந்நிய முதலீட்டையும் ஆதிக்கத்தையும் எதிர்ப்பதாகச் சவடால் அடித்துக் கொண்டே, தாங்கள் ஆளும் மாநிலங்களில் அந்நிய முதலீடுகளைப் பெருக்க வெளிநாடுகளுக்குப் பறக்கும் கடைந்தெடுத்த துரோகிகள் தான் என்பதை போலிகள் வெளிச்சம் போட்டுக் காட்டி விட்டார்கள். "நாங்கள் எளிமையானவர்கள்; ஊழல் கறை படியாதவர்கள் என்று மக்களை ஏய்த்துவந்த போலிகளின் சாயம் இப்போது வெளுத்து விட்டது. மற்ற ஓட்டுப் பொறுக்கிகளைப் போல, அரசு சலுகை, சன்மானங்களை அனுபவித்துக் கொண்டு, ஊதாரித்தனத்திலும் உல்லாசத்திலும் மிதக்கும் ஒட்டுண்ணிக் கூட்டம் தான் என்பதை அவர்கள் மீண்டும் நிரூபித்துக் காட்டிவிட்டார்கள்.

என்று குழந்தைகள் முழங்குகின்றனர். "சதி" பக்திப் பாடல் ஒலிப் பேழைகள், வழிபாட்டு நூல்கள், சதி மாதா கோயில்களைப் பற்றிய விளக்கப் படங்கள், ரூப் கன்வர் உருவம் பொறித்த பேனாக்கள், நோட்டுப் புத்தகங்கள், சாவிக் கொத்துக்கள், சதிமாதா ஆசி பெற்ற முகம் பார்க்கும் கண்ணாடிகள் முதலானவை ஜெய்ப்பூரில் பரபரப்பாக விற்பனையாகின்றன.

சதிமுறையை ஆதரித்துப் போற்றும் இந்த விழாவையும் வேள்வியையும் தடை செய்யக் கோரி தேசிய மகளிர் கமிஷன் உயர்நீதி மன்றத்தில் மனு செய்தது. ஆனால் ஜெய்ப்பூர் உயர்நீதி மன்றமோ, இது பெண் கடவுளான துர்க்கையை வழிபடுவதற்கான விழாதான் என்று கூறி இம்மனுவை நிராகரித்தது. மறுபுறம் வேள்வியை கோயிலினுள் நடத்தக்கூடாது என்று உத்தரவிட்டு காட்டுமிராண்டித்தனத்துக்கு எதிராக நிற்பது போல் நாடகமாடியது. ஆனால் சாதிவெறியர்களோ கோயில் வளாகத்தில்தான் வேள்வியை நடத்தியுள்ளனர். கோயிலின் உள்ளே வேள்வியை நடத்தினால்தான் அது சட்டத்தை மீறிய செயல்; வளாகத்தில் நடத்துவதைத் தடுக்க உரிமை இல்லை என்று கூறிக் கொண்டு போலீசும் அதிகார வர்க்கமும் கைகட்டி நின்று சேவகம் செய்தது.



அரசு எந்திரத்தின் ஆதரவுடன் சதிமாதாவுக்கு யாகம் நடத்தப்பட்ட அரங்கம். உள்ளே: சதிமாதா கோயில்

## 'சதி'காரர்களுக்கு அரசே உடந்தை

சட்டம், நீதித்துறை, அதிகார வர்க்கம், போலீசு ஆகிய அரசு எந்திரத்தின் ஆசியோடும், ஆதரவோடும் மீண்டும் ஒரு காட்டுமிராண்டித்தனம் அண்மையில் இராஜஸ்தானில் நடந்தேறியுள்ளது. ஜெய்ப்பூர் அருகிலுள்ள ஜுன்ஜுனுவில் உள்ள "சதிமாதா" கோயிலில் சதிராணி நாராயணி தேவியின் 400-வது பிறந்த நாளையொட்டி 9 நாட்களுக்கு விழாவும், "மகாசண்டி" யாகமும் கடந்த நவம்பர் மாத மத்தியில் நடந்துள்ளன. 51 பார்ப்பனர்கள் வேள்வியை நடத்த, 400 பார்ப்பனர்கள் மந்திரங்களை உச்சரிக்க, பெரும் பொருட் செலவுடன் நடந்த இந்த விழாவுக்கு பல்லாயிரக்கணக்கில் பக்தர்கள் குவிந்தனர். "சதி" எனும் உடன்கட்டை ஏறும் காட்டுமிராண்டித்தனத்தைப் போற்றி வழிபடும் நோக்கத்தோடு இராஜபுத்திர சாதிவெறியர்களால் இந்த விழா நடத்தப்பட்டது.

இராஜஸ்தானில் 9 ஆண்டுகளுக்கு முன்பு ரூப் கன்வர் என்ற இளம்பெண், மாண்டுபோன தனது கணவனோடு சேர்த்து உடன்கட்டை ஏற்றிக் கொல்லப்பட்ட வழக்கில், குற்றவாளிகள் அண்மையில் விடுதலையாகி உள்ளதைத் தொடர்ந்து, இராஜபுத்திர சாதி வெறியர்கள் புதுத் தெம்பும் தைரியமும் அடைந்துள்ளனர். பள்ளிகளில், காலை இறைவணக்கக் கூட்டத்தில் "ஜெய் ராணிசதிமாதா"

இராஜஸ்தானின் ஓட்டுப் பொறுக்கிக் கட்சிகள் அனைத்தும் இப்பிற்போக்குத் தனத்துக்கு ஆதரவாகவே நிற்கின்றன. ஜனதா கட்சியின் கல்யாண்சிங் கால்வி, ரூப் கன்வர் உடன்கட்டை ஏற்றப்பட்டதை ஆதரித்துப் பேசுகிறார். பாரதீய ஜனதாவின் விஜயராஜி சிந்தியா, சுயவிருப்பத்துடன் உடன்கட்டை ஏறுவதில் தவறில்லை என்கிறார்.

ஒரு புறம் மைக்கேல் ஜாக்சனின் பாப் இசை வெறிக் கூச்சல்கள் - ஆபாச அழகிப் போட்டிகள்; மறுபுறம் மத்திய கால காட்டுமிராண்டித்தனத்துக்கு வழிபாடு! அரைக் காலனிய - அரை நிலப்பிரபுத்துவ ஆதிக்கத்தில் இந்தியா சிக்கித் தவிப்பதைக் காட்ட இதைவிட வேறென்ன சான்று வேண்டும்?

## ஒடுக்கப்பட்ட மக்களின் உணவுக் கலகம்

மத்தியப் பிரதேசத்தின் சோகார் மாவட்டத்திலுள்ள ராஹேலி கிராமத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டோரும் மலைவாழ் மக்களும் கடந்த டிசம்பர் 8-ம் நாளன்று மிகப் பெரியதொரு உணவுக் கலகத்தில் இறங்கி, கிராமச் சந்தையைச் சூறையாடியுள்ளனர். ஏறத்தாழ ஒரு லட்ச ரூபாய் மதிப்புள்ள உணவு தானியங்



படிப்பகம்

www.padippakam.com



களை பதுக்கல் - கள்ளச் சந்தை வியாபாரிகளிடமிருந்து அவர்கள் பறித்துச் சென்றனர். பட்டினிப் பட்டாளத்தின் இந்த உணவுக் கலகத்தை அடக்க போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 15-க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். நூற்றுக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அண்மைக் காலமாக, அதிகரித்துவரும் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலையேற்றத்தைத் தொடர்ந்து, வட மாநிலங்களில் கோதுமையின் விலை தாறுமாறாக உயர்ந்து விட்டது. கிலோ ரூ. 5-க்கு விற்ற கோதுமை இன்று ரூ 12 ஆகிவிட்டது. இதன் விளைவாக பதுக்கலும் - கள்ளச் சந்தையும் தீவிரமாகி, ஏழை மக்கள் திண்டாடுகின்றனர். இந்நிலையில் தாழ்த்தப்பட்டோர் - மலைவாழ் மக்களுக்கான கூட்டுறவுச் சங்கங்களில் ரேஷன் அட்டைதாரர்களுக்கு மானிய விலையில் வழங்கப்படும் 10 கிலோ கோதுமையும் நிறுத்தப்பட்டு விட்டது. ஒருபுறம் தாறுமாறான விலையேற்றம், மறுபுறம் மானிய விலையிலும் கோதுமை கிடையாது என்றால், ஏழைகள் எத்தனை நாட்கள் இக்கொடுமையைத் தாங்கிக் கொண்டு பட்டினி கிடக்க முடியும்? இதனால் ஆத்திரமடைந்த அடித்தட்டு ஏழை மக்கள் தன்னெழுச்சியாகத் திரண்டு நடத்தியது தான் இந்த உணவுக் கலகம்!




ஆசிய-பசிபிக் கூட்டமைப்பையும் அமெரிக்க மேலாதிக்க வல்லரசையும் எதிர்த்து பிலிப்பைன்ஸில் நடந்த ஆர்ப்பாட்ட பேரணி

உலக வங்கியின் உத்திரவுப்படி உணவுக்கான மானியங்களைக் குறைப்பது, ரேஷன் கடைகளை இழுத்து மூடுவது உணவு தானியங்களை மேலை நாடுகளிலிருந்து இறக்குமதி செய்வது என்ற கொள்கையை இந்திய ஆட்சியாளர்கள் பின்பற்றி வருவதன் எதிர் விளைவுதான் இப்போராட்டம். ஆட்சியாளர்களோ, ஒரிசாவைப் போல இந்தியா முழுவதும் பட்டினிச் சாவுகளைப் பரவச் செய்யும் நோக்கத்தில் செயல்படுகின்றனர். ஆனால் ஒடுக்கப்படும் ம.பி. விவசாயிகளோ, ஜோர்டான் நாட்டில் கடந்த செப்டம்பர் மாத இறுதியில் நடந்த உணவுக் கலகத்தைப் போல ஒரு எழுச்சியில் இறங்கி ஆளும் கும்பலின் முகத்தில் கரிபூசியுள்ளனர்.

## மேலாதிக்க வல்லரசுகளின் மறுகாலனியச் சதிகள்

அமெரிக்க, ஜப்பானிய வல்லரசுகளின் பிராந்திய வர்த்தக வளையமான ஆசிய - பசிபிக் பொருளாதாரக் கூட்டமைப்பின் (APEC) 4-வது உச்சி மாநாட்டுக்கு எதிராக, பிலிப்பைன்ஸ் நாட்டின் இடது சாரி அமைப்புகளும் விவசாயிகளும் நடத்திய பேரணிகள் - ஆர்ப்பாட்டங்களைக் கண்டு ஏகாதிபத்தியவாதிகளும், இக்கூட்டமைப்பிலுள்ள நாடுகளின் துரோகத் தலைவர்களும் பீதியில் உறைந்து போயுள்ளனர்.

அமெரிக்கா, கனடா, மெக்சிகோ, சிலி, ஆஸ்திரேலியா, ஜப்பான், சீனா, தைவான், தென்கொரியா, ஹாங்காங், பாப்புவா நியூ கினியா ஆகிய நாடுகளும், தென்கிழக்காசிய கூட்டமைப்பிலுள்ள (ASEAN) ஏழு நாடுகளும் ஆசிய - பசிபிக் பொருளாதாரக் கூட்டமைப்பில் உள்ளன. கடந்த நவம்பர் மாத இறுதியில் பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைநகர் மணிலாவில் நடந்த இக்கூட்டமைப்பின் மாநாட்டில், இதில் அங்கம் வகிக்கும் நாடுகள் வர்த்தகம் மற்றும் முதலீட்டுக்கான தடைகள் அனைத்தையும் நீக்குவது, சுங்கவரி-காப்புவரித் தடைகளை அகற்றுவது, தனியார் மயம் - தாராளமயத்தை முடுக்கிவிடுவது என்று முடிவு செய்யப்பட்டு, 1997-ஜனவரி முதல் நாளிலிருந்து இதைச் செயல்படுத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தாராளமயம் - கூட்டுறவு - சாதனை என்பதே எமது மைய முழக்கம் என்று இம்மாநாட்டில் பங்கேற்ற தலைவர்கள் அறிவித்துள்ளனர்.

குறிப்பாக, தகவல் தொடர்பு தொழில் நுட்பத் துறையில் இந்நாடுகளுக்கிடையிலான வர்த்தகத் தடைகள் அனைத்தும் நீக்கப்பட்டு, கணிப்பொறிகள், மென்பொருட்கள், மின்னணு கடத்திகள், மின்னணு சில்லுகள், தொலைவரி நகல் எந்திரங்கள், கம்பியில்லா தொலைபேசி முதலானவை இந்நாடுகளில் வெள்ளமெனப் பாயும். தகவல் - தொடர்புத் துறையில் மேலோங்கியுள்ள அமெரிக்கா மற்றும் ஜப்பானிய வல்லரசுகளின் வர்த்தகம் அடுத்த பத்தாண்டுகளில் 250%-க்கு மேல் உயரும். அமெரிக்க, ஜப்பானிய தகவல் தொடர்பு சாதனங்களின் இறக்குமதியால், இவ்வளையத்திலுள்ள நாடுகளின் உள்நாட்டுத் தொழில்கள் நலிவடைந்து மூட வேண்டிய நிலை, ஏற்படும். இதனால் வேலையின்மை தீவிரமடையும்.

எனவே தான், அமெரிக்க - ஜப்பானிய வல்லரசுகளின் மேலாதிக்கத்திற்கான கருவியாகச் செயல்படும் இக்கூட்டமைப்புக்கு எதிராக பிலிப்பைன்ஸ் மக்கள் கிளர்ந்தெழுந்தனர். ஒருவார காலம் நடந்த இம்மாநாட்டின் போது தினமும் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். கடைசி நாளன்று மணிலாவிலிருந்து சுபி குடா வரை 10,000-க்கும் மேற்பட்டோர் திரண்டு இக்கூட்டமைப்புக்கு எதிராகவும், அமெரிக்க வல்லரசுக்கு எதிராகவும் முழக்கமிட்டுக் கொண்டு மிகப் பெரியதொரு ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தியுள்ளனர். பிலிப்பைன்ஸ் போலீசும் இராணுவமும் அடக்குமுறையை ஏவிய போதிலும் அதையும் மீறி நடந்த இப்பேரணி ஏகாதிபத்தியவாதிகளின் வயிற்றில் புளியைக் கரைத்துள்ளது.

பிராந்திய வர்த்தக வளையங்களை நிறுவி உலகை மறுபங்கீடு செய்வது, ஆசிய - பசிபிக் கூட்டமைப்பின் முடிவுகளை உலக வர்த்தக நிறுவனத்தில் (WTO) திணிப்பது. அதன் மூலம் உலக நாடுகள் அனைத்தின் மீதும் மேலாதிக்கம் செலுத்துவது என்பது தான் வல்லரசுகளின் நோக்கமாக உள்ளது. அண்மையில் சிங்கப்பூரில் நடந்த உலக வர்த்தக நிறுவனக் கூட்டத்தில் வல்லரசுகளால் திணிக்கப்பட்ட முடிவுகளும் இதையே நிரூபித்துள்ளன. ஆனால் ஒடுக்கப்பட்ட நாடுகளின் மக்கள் வல்லரசுகளின் மறுகாலனி ஆதிக்கத்தை ஒருபோதும் மௌனமாகச் சகித்துக் கொண்டிருக்க மாட்டார்கள் என்பதை பிலிப்பைன்ஸ் மக்களின் போராட்டம் தெளிவாக உணர்த்துகிறது.

## பட்டினியில் 100 கோடிப்பேர் ஏகாதிபத்திய உலகின் கொடுமை

உணவுப் பற்றாக்குறையாலும் சத்துணவின்மையாலும் பஞ்சத்தாலும் உலகின் 100 கோடி மக்கள் பட்டினியால் பரிதவிக்கும் நிலையில் ஐ.நா. மன்றத்தின் சார்பில் உலக உணவு மாநாடு கடந்த நவம்பர் மாத மத்தியில் நடைபெற்றது. குறிப்பாக ஆப்பிரிக்காவில் தலைவிரித்தாடும் பஞ்சம் - பட்டினிச் சாவுகளைப் பற்றி ஆழ்ந்த கவலை தெரிவித்த 200 நாடுகளின் பிரதிநிதிகள், கி.பி. 2015-க்குள் உலகிலிருந்து பட்டினியையும் ஏழ்மையையும் விரட்



படிப்பகம்

www.padippakam.com



டப் போவதாகச் சூளுரைத்தனர். உலகில் ஒவ்வொரு மனிதனும் முழுமையான உணவு பெற உரிமையுடையவன் என்று தீர்மானம் கொண்டு வந்தனர்.

ஆனால் இத்தீர்மானத்தில் உலக நாடுகளின் தலைவர்கள் முறைப்படி கையெழுத்திடாததால், இத்தீர்மானம் அவர்களைக் கட்டுப்படுத்தாது. மேலும், ஏழ்மையையும் பட்டினியையும் ஒழிக்க குறிப்பான காலக் கெடுவும் இத்தீர்மானத்தில் இல்லை. கடைசியில் இம்மாநாடு எந்த நோக்கத்தையும் நிறைவேற்றாமல் வெறும் கேலிக் கூத்தாகி விட்டது.



ஏகாதிபத்திய உலகின் கொடூரம்: பஞ்சம்-பட்டினியால் பரிதவிக்கும் சூடான் மக்கள்

முதல் உலக உணவு மாநாடு 22 ஆண்டுகளுக்கு முன்பு 1974-ல் ரோம் நகரில் நடந்தது. அம்மாநாட்டில் இன்னும் 10 ஆண்டுகளில் உலகின் உணவுப் பற்றாக்குறையைத் தீர்ப்பது எனத் தீர்மானிக்கப் பட்டது. பத்தாண்டுகள் போனதே தவிர, உலகின் பஞ்சமும் பட்டினியும் தீரவில்லை. மாறாக, தீவிரமாகிவிட்டது.

ஆப்பிரிக்க நாடுகளை விட ஆசிய நாடுகளில்தான் மிகப் பெரிய உணவுப் பஞ்ச அபாயம் நிலவுவதாக இம்மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளும், உணவு மற்றும் விவசாய அமைப்பின் (FAO) அறிக்கைகளும் எச்சரிக்கின்றன. ''சீனாவைத் தவிர இதர ஆசிய நாடுகளில் ஆப்பிரிக்காவை விட மிக மோசமான பஞ்சம் நிலவுகிறது; அடுத்த 15 ஆண்டுகளில் தெற்காசியாவில் உள்ள 20 கோடி குழந்தைகள் சத்துணவின்றி கடுமையாகப் பாதிக்கப்படுவர். உலக மக்கட் தொகையில் பாதிப்பேர் - உலக விவசாயிகளில் முக்கால் பங்கினர் அடுத்த பத்தாண்டுகளில் பட்டினிச் சாவுக்குத் தள்ளப்படுவர்.''

நவீனமயமாக்கல், அந்நியச் செலாவணியை ஈட்டுவது என்ற பெயரில் ஏற்றுமதிக்காக பணப்பயிர் உற்பத்திக்கு முக்கியத்துவம் தரப்படுவதால், உணவு தானிய உற்பத்தி குறைந்து போகிறது. இதன் விளைவாக 2030-ம் ஆண்டில் இந்தியாவில் உணவுப் பஞ்சம் தீவிரமாகிவிடும். இந்தியா, பாகிஸ்தான், வங்கதேசம், பர்மா, ஆப்கான், இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, வியட்நாம், நேபாளம் ஆகிய நாடுகளில் பட்டினிச் சாவுகள் பெருகிவிடும்'' என்று மாநாட்டு அறிக்கைகள் எச்சரிக்கின்றன.

உணவை ஒரு ஆயுதமாக்கிக் கொண்டு நவகாலனிய ஆதிக்கம் செலுத்திவரும் ஏகாதிபத்தியங்களும், அவற்றின் எடுபிடிகளாக ஏழை நாட்டு ஆளும் வர்க்கங்களும் உள்ள வரை உலகிலிருந்து ஏழ்மையையும் பட்டினியையும் ஒருபோதும் ஒழிக்க முடியாது. இந்த உண்மையை உலக உணவு மாநாடு எதிர் மறையில் நிரூபித்துக் காட்டியுள்ளது.

## பன்னாட்டு நிறுவனத்தின் கோரப்பிடியில் வைரச் சுரங்கம்

நாட்டின் ஒவ்வொரு துறையையும் அந்நிய ஏகாதிபத்தியங்களுக்குத் தாரைவார்த்து வரும் ஆட்சியாளர் கள், இப்போது இந்தியாவின் விலைமதிப் பற்ற வைரச் சுரங்கத்தையும் டீபீர்ஸ் (Debeers) எனும் தென்னாப்பிரி க்க பன்னாட்டு நிறுவனத்திடம் கையளித்து விட்டார்கள். மத்தியப் பிரதேசத்தின் தேவ்போக் வட்டாரத்திலுள்ள வைரச் சுரங்கங்களில் கிடைக்கும் வைரங்கள் உலகிலேயே விலைமதிப்பற்றவை; தென்னாப்பிரி க்க வைரங்களை விட அழகும் ஒளியும் நிறைந்தவை. எனினும் ஆண்டுக்கு 10% மட்டும் ராயல்டியாகப் பெற்றுக் கொண்டு ம.பி.யின் ஆளும் காங்கிரசு கும்பல் இவ்வைரச் சுரங்கத்தை விலைபேசி விட்டது.

தனியார் மயம், தாராளமயம் என்ற பெயரில் நடந்த இந்த பேரத்தினால் இந்திய அரசுக்கு 9000 கோடி ரூபாய்க்கு மேல் இழப்பு ஏற்பட்டுள்ளதென்று, அஜித்ஜோகி என்ற காங்கிரசு எம்.பி.யே அம்பலப் படுத்துகிறார்.

வைரங்களைப் பட்டை தீட்டுவது, செயற்கை வைரங்கள் தயாரிப்பது முதலானவற்றில் உலகின் முக்கிய மையமாக இந்தியா விளங்குகிறது. இன்னும் சொல்லப்போனால், தென்னாப்பிரிக்க டிபீர்ஸ் நிறுவனத்தின் வைரங்களையே இந்தியாதான் பட்டை தீட்டித் தருகிறது. ஆனாலும் இவற்றையெல்லாம் உதாசீனப்படுத்தி விட்டு, அந்நிய மோகத்துடன் நாட்டின் செல்வங்களைப் பன்னாட்டு பகற் கொள்ளை நிறுவனங்களின் காலடியில் ஆட்சியாளர்கள் வைத்து விட்டனர்.

அன்மையில், டிபீர்ஸ் நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் குழு பரிசோதனைக்காக வைர மாதிரிகளைப் பார்வையிட வந்தபோது, தேவ்போக் வட்டார மக்கள் பெரும்படையாகத் திரண்டெழுந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். ''எமது கனிம வளத்தையும் வைரத்தையும் அந்நியர்கள் அள்ளிச் செல்ல அனுமதிக்க மாட்டோம்'' என்ற முழக்கம் எங்கும் எதிரொலித்தது. போலீசார் கண்மூடித்தனமான அடக்குமுறையை ஏவி, போராடிய மக்களை விரட்டிய பின்னரே, டீபீர்ஸ் நிறுவனத்தினர் பத்திரமாகத் தப்பிச் செல்ல முடிந்தது.

ம.பி.யின் காங்கிரசு அரசு மட்டுமல்ல; நாட்டை மறுகாலனியாக்கும் முயற்சியில் நாங்கள் சற்றும் சளைத்தவர்கள் அல்ல என்று மத்தியிலுள்ள ஐ.மு. அரசும் வைரச் சுரங்கத்தைத் தாரைவார்க்கும் அயோக்கியத்தனத்துக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இம்முடிவை எதிர்த்து ம.பி. சட்டசபையில் கூச்சல்போட்டும், தேவ்போக் வட்டார மக்களின் போராட்டத்திற்குத் தலைமை தாங்கியும் கோமாளித்தனமாக சுதேசி நாடகமாடி அரசியல் ஆதாயம் தேட பாரதீய ஜனதா முயற்சித்து வருகிறது. எதிர்ப்புகளை திசைதிருப்பி வடிகால் அமைக்கும் நோக்கத்துடன் டீபீர்ஸ் நிறுவனமும் மாநில அரசும் கூட்டுச் சேர்ந்து வைரச் சுரங்கத் தொழிலில் ஈடுபடும் என்று மாநில முதல்வர் இப்போது மாய்மாலம் செய்து வருகிறார்.



படிப்பகம்

www.padippakam.com




*• தனிநாடு கேட்டு இனப் போராட்டம் தீவிரமடையும் போது அந்நாட்டு பெருவாரியான மக்கள் அதனை அங்கீகரிக்கும் போது ஆதரிக்கும் தங்களது தோழமை இயக்கங்கள் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக் குரலாக முற்போக்கு அம்சங்களை தாங்கியும் தலித் தலைமை, தலித் விடுதலையை முன்வைத்து வெளிவரும் தலித்துக்களின் தலித் இலக்கியங்கள், தலித் போராட்டங்களை ஆதரித்து அதற்கான இயக்கம் எடுப்பது சரிதானா? இன்றைய கட்டத்தில் அது தேவை அல்லவா? ஏனெனில் தலித்திய உரிமைக்கான குரல்கள் இன்று மேலோங்கி அதற்கு ஆதரவும் பெருகி வருகையில் தங்களின் நிலை என்ன? தலித் விடுதலை என்பதே வர்க்கப் போராட்டத்தின் அங்கமாகவும் முதல் படியாகவும் கொண்டு அதனை 'பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்' எனும் உயர்ந்த மட்டத்திற்கு உயர்த்துதல் கூடாதா?' தலித் மதுரைவீரன், மதுரை.*

☆ தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலை என்பதே வர்க்கப் போராட்டத்தின் அங்கமாகவும் முதல்படியாகவும் கொண்டு செயல்படுவதில் நமக்கு எதுவித தயக்கமும் சுனக்கமும் இருந்தது கிடையாது. தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைக்காகப் போராடும் உண்மையான அமைப்புகள் - இயக்கங்கள் எடுக்கும் போராட்டங்களை ஆதரிப்பதில் மட்டுமல்ல, அவற்றை முன்னெடுப்பதில் தமிழ்நாட்டைப் பொருத்தவரை வேறு எந்த அமைப்புகளையும் விடத் தன்மையிலும் அளவிலும் பன்மடங்கு கூடுதலாக முன்முயற்சியையும் நடைமுறையையும் நமது அமைப்புகள் கொண்டிருக்கின்றன. புதிய ஜனநாயகத்தில் வரும் அமைப்புச் செய்திகளே இதை விளக்கும்.

திருவரங்கம் கருவறை நுழைவு, குறுங்குளம், பொய்கை அரசூர் சாதி இந்துக்களின் ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டங்கள் என்று சிறியதும் பெரியதுமான பல்வேறு அளவுகளிலும் மட்டங்களிலும் அன்றாட இயக்கங்கள் தொடருகின்றன. தாழ்த்தப்பட்டோர் குரலெடுக்கும் இடமெல்லாம் ''அரிஜன் என்று சொல்ல யாரடா நாயே நீ'' என்ற எமது அசுரகானம் ஒலிக்கிறது. ''இந்தப் போக்கு நீடித்தால் உங்களுடைய அமைப்புகள் தாழ்த்தப்பட்டவர்களின் அமைப்புகள் என்றாகி

> மார்க்சிய - லெனினிய புரட்சிகர இயக்கத்துக்கு வெளியே ''தலித்'' விடுதலை, ''தலித்'' உரிமைக்கான போராட்டம், ''தலித்'' எழுச்சி என்று எதுவும் கிடையாது என்பதுதான் உண்மை! விதிவிலக்காக ஓரிரு சிறு குழுக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் தன்னெழுச்சியாக நடத்தும் போராட்டங்கள் தவிர, நீடித்த நிலையான இயக்கமாக எதுவும் கிடையாது.

விடாதா? பிற சாதியினர் வருவார்களா?'' என்று ஒரு வாசகர் சில ஆண்டுகளுக்கு முன்பு புதிய ஜனநாயகத்திடம் கேட்டார். அப்படி ஆகிவிடுவது தவறில்லை; அதை ஏற்றுக்கொள்ளும் பிற சாதியினரை மட்டுமே நாம் வரவேற்கிறோம் என்றே பதிலளித்தோம்.

இன்று ''தலித்''தியத்துக்கு வியாபார முத்திரை - உரிமை வைத்திருப்பவர்கள் மண்டல் அறிக்கையை நிபந்தனையின்றி ஆதரித்தனர். நாமோ ஒடுக்கப்படும் தாழ்த்தப்பட்டவர்களுக்கான இட ஒதுக்கீட்டின் நியாயத்தையும் அவசியத்தையும் உயர்த்திப்பிடித்த அதேசமயம், அவர்களை சகலவிதத்திலும் ஒடுக்கும் சத்திரிய, வைசிய வழிவந்த மேல் சாதியினர் தாமும் சூத்திர சாதிதான் என்று கூறி இட ஒதுக்கீடு உரிமை கோருவது எப்படி நியாயமாகும் என்று எதிர்த்தோம். திருவரங்கம் கருவறை நுழைவுப் போராட்டத்துக்கு தாழ்த்தப்பட்டோர் பெயரிலான ஒரு சில அமைப்புகள் ஆதரித்ததை எப்படி ஏற்றீர்கள் என்ற கேள்வி எழுப்பப்பட்டது. தாழ்த்தப்பட்டோர் பெயரில் ஏற்கனவே உள்ள அமைப்புகள் பிழைப்புவாதத்துக்கு பலியாகிவிட்டன; புதிய முயற்சியுடன் தொடங்கப்படும் அமைப்புகள் அப்படிச் சீரழியாதவரை அவை தமது உறுதியைக் காட்டுவதற்கான ஒரு வாய்ப்பாக ஆதரவளிப்பது தவறில்லை என்றே பதிலளித்தோம். ஆனால் பின்னர் அவை பிழைப்புவாதத்துக்கோ, ஏகாதிபத்தியத் தன்னார்வக் குழுக்களின் துணையாகவோ சீரழிந்து போயின.

இவையெல்லாம் தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலை - உரிமையில் நமக்குள்ள தெளிவையும் உறுதிப்பாட்டையும் சுட்டுவதற்காகவே சொல்கிறோம். தாழ்த்தப்பட்ட மக்களைக் குறிக்கும் ஒரு சொல் என்கிற முறையிலேயே சிலசமயம் ''தலித்'' என்பதை நாம் பாவித்து வந்திருக்கிறோம். ஆனால்

> ஏகாதிபத்திய கழிசடை கலாச்சாரத்தை அடிப்படையாகக் கொண்ட பின்நவீனத்துவம் என்கிற தத்துவம் மிகவும் அபாயகரமானது. இதுவே மார்க்சியம், பெரியாரியம், அம்பேத்காரியம் ஆகியவற்றின் கலவையான புதிய வார்ப்பாக ''தலித்தியம்'' என்கிற பெயரில் தரப்படுகிறது.

இப்போது சில குழுக்கள் அதற்கு அரசியல் - சித்தாந்த - அமைப்புத் தன்மைகள் குணங்கள் பலவற்றையும் ஏற்றி வருகின்றன. அந்த அடிப்படையில் ''தலித் தலைமை'', ''தலித்தியம்'', ''தலித் விடுதலை'', ''தலித் இலக்கியம்'', ''தலித் உரிமை'', ''தலித் எழுச்சி'' என்றெல்லாம் கூறிக் கொள்ளும் கோட்பாடுகள் முன்வைக்கப்படுகின்றன. உண்மையில் இவையெல்லாம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரானவை என்பதால் நாம் ஏற்கவில்லை. இந்தக் கோட்பாடுகள் எல்லாம் எந்த சித்தாந்த அடிப்படை - கண்ணோட்டத்தில், எந்தெந்த அமைப்பு, இயக்கம், தலைமையில், என்னென்ன நோக்கத்தோடு முன்வைக்கப்படுகின்றன என்பதை ஆழமாகப் பார்க்கவேண்டியுள்ளது. இப்படியெல்லாம் பார்த்தால் தங்கள் அடையாளம் - உள்நோக்கம் அம்பலப்பட்டுப் போகும் என்பதால் ''தலித்'' என்ற பெயரில் எதைச் சொன்னாலும் - செய்தாலும் ஏற்க வேண்டும்; அதை விமர்சிக்கவோ, நிராகரிக்கவோ உரிமை இல்லை; அதற்கு உடன்படாவிட்டால் பார்ப்பன - வேளாள முத்திரை குத்திவிடுவோம் என்று தடலடியாக உருட்டி மிரட்டவும் எத்தணிக்கிறது, ஒரு கும்பல்.

மார்க்சிய - லெனினியப் புரட்சிகர இயக்கத்துக்கு வெளியே ''தலித்'' விடுதலை, ''தலித்'' உரிமைக்கான போராட்டம், ''தலித்'' எழுச்சி என்று எதுவும் கிடையாது என்பதுதான் உண்மை! விதிவிலக்காக ஓரிரு சிறு குழுக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் தன்னெழுச்சியாக நடத்தும் போராட்டங்கள் தவிர, நீடித்த நிலையான இயக்கமாக எதுவும் கிடை



படிப்பகம்

www.padippakam.com

யாது. அவையும் பிழைப்புவாதத்தினாலோ, ஏகாதிபத்திய தன்னார்வக் குழுக்களினாலோ சீரணிக்கப்பட்டு விடுகின்றன. மராட்டியத்தில் தோன்றிய ''தலித்'' எழுச்சி - ''தலித்'' இலக்கியம் என்கிற இயக்கத்தினர் காங்கிரசு, பாரதீய ஜனதா வரை சங்கமமாகிப் போயினர். சமீபத்தில் தென் மாவட்டங்களில் சாதி ஒடுக்குமுறைக்கு எதிரான தாழ்த்தப்பட்ட மக்களின் தன்னெழுச்சியான போராட்டங்களும் தன்னார்வக் குழுக்களின் கைப்பாவையான கிருஷ்ணசாமியும், பா.ம.க.வின் இராமதாசும் ஓட்டுப் பொறுக்குவதற்கு அறுவடை செய்து கொள்வதாகவே முடிந்தன.

''அம்பேத்கர் நூற்றாண்டு விழாவையொட்டி நாடு முழுவதும் தலித் எழுச்சி'' ஏற்பட்டிருப்பதாக தலித்தியத்தின் தமிழ்நாட்டுக் கண்டுபிடிப்பாளர்கள் செயற்கையானதொரு பிரமையூட்டி வருகின்றனர். கன்ஷிராம் கட்சியின் தேர்தல் வெற்றி, ''தலித் பண்பாட்டுப் பேரவை'' போன்ற அமைப்புகளின் தோற்றம், முன்பு சுபமங்களாவும் இப்போது தினமணி - இந்தியா டுடேயும் இவர்கள் எழுதுவதற்கு வாய்ப்பளிப்பது ஆகியவை ''தலித் எழுச்சி''க்கான நிரூபணமாகக் காட்டப்படுகின்றன. ஆனால் இந்த எழுச்சியின் பின்னணி பின்வரும் அடிப்படையிலானதுதான்:

காங்கிரசின் கட்டுக்கோப்பான ஓட்டு வங்கியாக இருந்த தாழ்த்தப்பட்ட மக்கள், இசுலாமியச் சிறுபான்மையினரது ஆதரவைப் பெறுவதற்காக தேசிய முன்னணி, ஜனதா தளம், ஐக்கிய முன்னணியினர், அம்பேத்கர் நூற்றாண்டு விழா, மதச்சார்பின்மை என்கிற அரசியல் துருப்புச் சீட்டுகளை வீசினர். காந்தி-நேரு பரம்பரைக் கவர்ச்சி மங்கிப் போனதால் ''இந்திய தேசிய''த்துக்கு புதுத்தெம்பூட்டுவதற்காக நேதாஜி,

> கம்யூனிச சித்தாந்தத்துக்கும், பாட்டாளி வர்க்கத்துக்கும் விரோதமான இந்த வகை பின்நவீனத்துவத்தையே மிகவும் புரட்சிகரமானதாகப் பாவித்துக் கொண்டு, இன்னமும் நவீனத்துவத்தையே காணாத இருண்ட பகுதிகளைக் கொண்டுள்ள இந்த நாட்டுக்குப் பிரயோகித்து, ''தலித்தியம்'' என்பதாக நீட்டி முழக்குகின்றனர்.

பகத்சிங், லோகியா, பெரியார், மிர்சா முண்டே போன்றவர்களை ''தேசியத் தலைவர்''களாக அங்கீகரித்து, நிறுவனமயமாக்கிக் கொண்டு வருகின்றன, ஆளும் வர்க்கங்கள். இந்த அடிப்படையில்தான் தினமணி, இந்தியா டுடே போன்றவை ''தலித் - மண்டல் வாதி'' களுக்கு இடமளிக்கின்றன.

இதையே ''தலித் எழுச்சி' எனச் சித்தரித்து, தாழ்த்தப்பட்ட மக்கள் புரட்சிகர இயக்கத்தில் இணைவதைத் தடுக்கவும், அவர்களைப் பிளவுபடுத்தி சிதறடிக்கவும் சீரழிக்கவும் ஏகாதிபத்தியக் கைக்கூலிகள் (ஏகாதிபத்தியத்தால் திட்டமிட்டு உருவாக்கப்படும் தன்னார்வக் குழுக்களும், தாமே முன்போய் ஏகாதிபத்திய ஊழியத்துக்கு ஒப்புக்கொடுக்கும் குழுக்களும் சேர்ந்துதான்) முயன்று வருகின்றனர். அந்த முயற்சிகளில் மிகவும் அபாயகரமானது ஏகாதிபத்திய கழிசடை கலாச்சாரத்தை அடிப்படையாகக் கொண்ட பின்நவீனத்துவம் என்கிற தத்துவம். இதுவே மார்க்சியம், பெரியாரியம், அம்பேத்காரியம் ஆகியவற்றின் கலவையான புதிய வார்ப்பாக ''தலித்தியம்'' என்கிற பெயரில் தரப்படுகிறது.

''தொழிற் புரட்சிக்குப் பிறகு உருவான தொழில்மயமாகுதல், நவீனமயமாகுதல், பொருளியலாகுதல் ஆகியவை முழுமையடைந்து பின் தொழில்மயமாதல், பின் பொருளியலாகுதல் அடங்கிய பின்நவீனத்துவக் காலகட்டத்துக்குள் உலகம் நுழைந்து விட்டது; எழுபதுகளில் ஏற்பட்ட அறிவியல் தொழில் நுட்பப் புரட்சி, உலகமயமாக்கல் ஆகியவையே இதற்குக் காரணம். இப்போது மனிதர்களின் வாழ்வின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாகிவிட்டதால், இனி தனிமனித ஆசைகள், சுகபோகங்கள், தரமான நுகர்பொருட்கள், உல்லாசக் களியாட்டங்கள் போன்றவை அவசியமாகிவிட்டன. இதனால் சமூக ஒழுக்கம், கட்டுப்பாடு, கூட்டுப் பொறுப்பு ஆகிய விழுமியங்களை விட, தனிநபர் விருப்புவெறுப்பு அடிப்படையிலான சுயேச்சை விழுமியங்கள் முதன்மையாகிவிட்டன'' என்பது ஏகாதிபத்தியத்தின் அதிகாரபூர்வத் தத்துவங்களில் ஒன்றாகிவிட்டது. இதன்மூலம் ''இனிமேலும் இடது-வலது, முற்போக்கு - பிற்போக்கு என்கிற சித்தாந்த வேறுபாடுகளுக்கு, வர்க்கப் போராட்டங்களுக்கு இடமில்லை'' எனப் பிரச்சாரம் செய்யப்படுகிறது. இந்தப் பின்நவீனத்துவமே நூற்றுக்கணக்கான வடிவங்களில் ஏகாதிபத்திய சமூக-கலாச்சார ஆய்வுகளினால் உற்பத்தி செய்யப்படுகிறது. இதில் ஒரு கடைகோடி நிலையெடுக்கும் தத்துவவாதிகள், கழிசடைக் கலாச்சார வாழ்க்கை வாழும் போதை மருந்து அடிமைகள், ஆண் - ஆண், பெண் - பெண் ஓரினச் சேர்க்கையாளர்கள், வரைமுறையற்ற பாலுறவு கும்பல்கள், நிர்வாணக் கழகங்கள் போன்றவர்களை எல்லா அதிகாரத்தையும் ஒழுங்கையும் மரபையும் மீறும் விளிம்பு நிலை புரட்சியாளர்களாகச் சித்தரிக்கின்றனர். பாட்டாளி வர்க்கத்துக்கும், கம்யூனிச சித்தாந்தத்துக்கும் எதிரான இந்த வகை பின்நவீனத்துவத்தையே மிகவும் புரட்சிகரமானதாகப் பாவித்துக் கொண்டு, இன்னமும் நவீனத்துவத்தையே காணாத இருண்ட பகுதிகளைக் கொண்டுள்ள இந்த நாட்டுக்குப் பிரயோகித்து, ''தலித்தியம்'' என்பதை இங்கே சில நபர்கள் கண்டுபிடித்துள்ளனர். தமது வக்கிர வாழ்க்கை மீது புரட்சிப் பீதாம்பரமாகப் போர்த்திக் கொள்வதற்கு, இதை அவர்கள் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

> ஒருங்கிணைந்த, ஒட்டுமொத்தமான, சாராம்சமான கண்ணோட்டமும் கூடாது; அதற்கேற்ப இந்த அரசு அதிகாரத்தை வீழ்த்துவதற்கான பெரிய - பெருந்தள அமைப்புகளும் கூடாது என்கின்றனர், தலித்தியவாதிகள். இதன் பொருள், நிராயுதபாணியாகவும், அமைப்புரீதியில் திரளாத வெறும் கும்பலாகவும் தாழ்த்தப்பட்ட மக்களைப் பலவீனப்படுத்துவதாகும்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசியல், சமூக, பண்பாட்டு வாழ்க்கையை மறுத்து, பஞ்சமர்களாகவும் சண்டாளர்களாகவும் தீண்டத்தகாதவர்களாகவும் ஒடுக்கி வைத்தது பார்ப்பனியம். நகர்ப்புறங்களில் வாழும் இம்மக்களில் பெரும்பான்மையினர் உதிரிப்பாட்டாளிகளாகவே இன்றைய ஆளும் வர்க்கங்களால் இருத்தி வைக்கப்பட்டிருக்கின்றனர். இதனால், அராஜகத் தன்மையுடைய பண்பாட்டு வாழ்க்கையில் தள்ளப்பட்டுள்ளனர். அதிலிருந்து மீண்டு ஒரு புதிய, புரட்சிகர பண்பாட்டு வாழ்க்கையை நிறுவிக் கொள்வதற்குப் பதிலாக எதிர்க் கலாச்சாரம், மாற்றுக் கலாச்சாரம் என்கிற பெயரில் பழைய அராஜகத் தன்மையுடைய பண்பாட்டு வாழ்க்கையிலேயே இருத்தி வைப்பதற்குத்தான் இந்தத் தத்துவம் பயன்படுத்தப்படுகிறது. இந்தத் தத்துவம் எந்த வகையில் சரியானது, நியாயமானது என்பதைக் கேள்விக்குள்ளாக்கக் கூடாது என்பதற்காகவே, பகுத்தறிவு, தர்க்கரீதியில் சிந்திப்பது எல்லாம் தவறானது என்று இதன் நிறுவத்தினர்கள் கவசம் போட்டுக் கொண்டுள்ளனர். ஒருங்கிணைந்த, ஒட்டுமொத்தமான, சாராம்சமான கண்ணோட்டமும் கூடாது; அதற்கேற்ப இந்த அரசு அதிகாரத்தை வீழ்த்துவதற்கான பெரிய - பெருந்தள அமைப்புகளும் கூடாது என்கின்றனர், இதன் கர்த்தாக்கள். ஆக, நிராயுதபாணியாகவும், அமைப்புரீதியில் திரளாத வெறும் கும்பலாகவும் தாழ்த்தப்பட்ட மக்களைப் பலவீனப்படுத்துவதுதான் ''தலித்திய''த்தின் உண்மையான நோக்கம். எனவே அதை ஆதரிக்க முடியாது.



படிப்பகம்

www.padippakam.com

# அன்னா ஹஸாரே:
## ஒரு காந்தியவாதியின் கையாலாகாத போராட்டம்

அன்னா ஹஸாரே மகாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்தவர்; காந்தியவாதி; ''இந்து சுவராஜ்'' என்ற சேவை அமைப்பின் அமைப்பாளர். அம்மாநிலத்தை ஆண்டு வரும் பாரதீய ஜனதா-சிவ சேனா கூட்டணி ஆட்சியில் நடந்துள்ள ஊழல்-அதிகார முறைகேடுகளை அம்பலப்படுத்தியுள்ள இவர், ஊழல் எதிர்ப்பு இயக்கமொன்றையும் தொடங்கியுள்ளார்.

இவரது எதிர்ப்பியக்கத்திற்கு அம்மாநில மக்கள் மத்தியில் எழுந்து வரும் ஆதரவைக் கண்டு நடுங்கிப் போயுள்ள இந்து மத வெறியர்கள், ஹஸாரே குறிப்பிட்டுள்ள ஊழல்-அதிகார முறைகேடுகளை விசாரிக்க, ஓய்வுபெற்ற உயர்நீதி மன்ற நீதிபதி எஸ். டபிள்யு. புரானிக்கை நியமித்துள்ளனர்.

ஊழல் குற்றம் சுமத்தப்பட்டுள்ள சிவ சேனாவைச் சேர்ந்த விவசாயத் துறை மந்திரி சசிகாந்த் சுதரும், பா.ஜ.க.வைச் சேர்ந்த பாசனத் துறை மந்திரி மகாதேவ் ஷிவங்கரும் பதவி விலகியுள்ளனர்.

ஹஸாரே அம்பலப்படுத்தி உள்ள 400 ஊழல்-அதிகார முறைகேடுகளில் மிகப் பெரும்பாலானவை விவசாயம் மற்றும் பாசனத் துறைகளில் தான் நடந்துள்ளன. விவசாயத் துறை மந்திரியாக இருந்த சசிகாந்த் சுதர், ''ராஜா சிவராய் பிரதிஸ்தான்'' என்ற பெயர்ப் பலகை அமைப்புக்கு 400 ஏக்கர் நிலத்தை முறைகேடாக ஒதுக்கியதாகவும், பாசனத் துறை மந்திரியாக இருந்த மகாதேவ் ஷிவங்கர் மழையே பெய்யாதபொழுது, வெள்ள நிவாரணம் என மோசடி செய்து 32 கோடி ரூபாயைச் சுருட்டிக் கொண்டு விட்டதாகவும் குற்றஞ் சுமத்தியுள்ளார், ஹஸாரே.

மேலும், விவசாயப் பல்கலைகழகத்திற்குத் தேவையான உரம்-பூச்சி மருந்துவாங்கியதிலும், அதிகாரிகளை விரும்பிய இடத்திற்கு மாற்றியதிலும் இலஞ்சம் புகுந்து விளையாடியுள்ளது. முதல் நிலை அதிகாரிகளுக்கு 1 லட்ச ரூபாய்; இரண்டாம் நிலை அதிகாரிகளுக்கு 60,000 ரூபாய் என விலை நிர்ணயம் செய்துகொண்டு, இவ்விரு அமைச்சர்களும் 200-க்கும் அதிகமான அதிகாரிகளை இடம் மாற்றியுள்ளனர்.

இக்குற்றச்சாட்டுகள் பற்றி மாநில அரசு நடத்திய இரகசிய விசாரணையில், பெரும்பாலான குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரமிருப்பது தெரிய வந்தது. எனினும் இவ்வுண்மையை மூடிமறைத்து விட்டு, சிவசேனா தலைவர் பால் தாக்கரே, பா.ஜ.க.வைச் சேர்ந்த பிரமோத் மகாஜன், அன்னா ஹஸாரே - இம்மூவரையும் கொண்ட விசாரணை கமிட்டியை அமைப்பதாக அறிவித்தார், மாநில முதல்வர் முரளி மனோகர் ஜோஷி. ஆனால் பொது மக்கள் மத்தியில் இக்கமிட்டிக்கு எழுந்த எதிர்ப்பின் காரணமாக, ஹஸாரே இக்கமிட்டியில் பங்குபெற மறுத்து விட்டார்.

இச்செப்படி வித்தை தோற்றபின், பா.ஜ.க.-சிவசேனா கூட்டணி, ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்க ஓய்வுபெற்ற உயர்நீதி மன்ற நீதிபதி எஸ். டபிள்யு. புராணிக்கை நியமித்தது. அதேபொழுதில் இந்த உத்தம சிகாமணிகள், பதவி விலகிய மந்திரிகளை மந்திரிசபையை விட்டு நீக்காமல், அவர்களுக்கு 'துறை சாரா மந்திரிகள்' என்ற புதிய தகுதியை வழங்கியுள்ளனர்; அரசு அமைத்துள்ள கமிட்டியில் முன்னாள் தலைமை போலீசு அதிகாரி ரிபைரோ, ஓய்வுபெற்ற உயர்நீதி மன்ற நீதிபதி எம்.எல். பெண்ட்ஸே இருவரையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்ற ஹஸாரேயின் கோரிக்கையை நிராகரித்தும் விட்டனர்.

மாநில மக்கள் மத்தியில் தங்கள் ஆட்சி மீது எழுந்து வரும் அதிருப்திக்கு அணை போடவும், நடைபெற உள்ள உள்ளூராட்சி தேர்தல்களில் மண்ணைக் கவ்விவிடும் அபாயத்தில் இருந்து தற்காத்துக் கொள்ளும் தந்திரத்தோடுதான் இந்த ஒரு நபர் கமிட்டியை இந்து மத வெறியர்கள் அமைத்துள்ளனர்.

• • •

முந்தைய காங்கிரசு ஆட்சியில் புழுத்து நாறிய ஊழல்கள், என்ரான் விவகாரம் - இவற்றைப் பிரச்சாரம் செய்துதான் பா.ஜ.க.-சிவசேனா கூட்டணி மகாராஷ்டிரத்தில் ஆட்சியைக் கைப்பற்றியது. ஆட்சியைப் பிடித்த மறுநிமிடமே என்ரான் விவகாரத்தில், அதன் சுதேசி அரிதாரம் கலைந்து போனது; ரமேஷ் ராம்ராவ் கினியின் மரணம், நில முதலைகளுடன் பால் தாக்கரே குடும்பத்திற்கு உள்ள தொடர்பு, காலனி கூட்டுறவுச் சங்கங்களில் நடந்துள்ள மோசடிகள் - . இவை அனைத்தும் இம்மத வெறியர்களின் யோக்கியதையை ஏற்கனவே சந்தி சிரிக்க வைத்து விட்டன.

மேலும், நமது நாட்டின் பொருளாதாரத் தலைநகராகத் திகழும் பம்பாயில் வலுவாக உள்ள பா.ஜ.க.- சிவ சேனா கட்சி, தரகுப் பெரு முதலாளிகள் - வணிகர்கள், பன்னாட்டு நிதி நிறுவனங்கள், மாஃபியா கிரிமினல்களோடு நூற்றுக்கணக்கான வழிகளில் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. இந்நிலையில் ஹஸாரே அம்பலப்படுத்திய ஊழல்கள் ஒரு சிறு துளி தான். மேலும், அவரது அரசியல் அற்ற அறப்போராட்டங்களும், அப்பழுக்கில்



தனது ஆதரவாளர்களுடன் அன்னா ஹஸாரே: போகாத ஊருக்கு வழி காட்டுகிறார்



படிப்பகம்

www.padippakam.com

லாத அதிகாரிகளைக் கொண்டு விசாரணை கமிட்டிகளை அமைக்க அவர் விடுக்கும் கோரிக்கைகளும் புதிதாக எதையும் சாதிக்கப் போவதில்லை.

பால் தாக்கரேயின் வரம்பற்ற சொத்துகள் பற்றி அரசு விசாரணை நடத்த வேண்டும் எனக் கோரும் ஹஸாரே, தாக்கரேயின் பிரதிநிதியாக வரும் முரளி மனோகர் ஜோஷியுடன் சேர்ந்து கொண்டு ஊழல் ஒழிப்பு பற்றி விவாதிக்கிறார். ஊழல் பேர்வழிகளை மக்களின் எதிரிகளாக அடையாளம் காட்டாமல், அவர்கள் அறியாமல் செய்துவிட்ட பிழையாகச் சித்தரிக்க முயல்கிறார். அவர், ஊழல் பேர்வழிகளைத் தண்டிக்கும் உரிமையை மக்கள் எடுத்துக் கொள்வதற்கு முட்டுக்கட்டை போட்டு, ஆட்சியாளர்கள் மனமிரங்கி வர கெஞ்சிக் கூத்தாடுவதுதான் அவரது பாதை. இதன் மூலம் ஊழலுக்கு எதிராக மக்கள் மத்தியில் எழுந்து வரும் ஆத்திரத்தையும் வெறுப்பையும் தனித்து, அவர்களை கையறு நிலைக்குள் தள்ளி விடுகிறார், ஹஸாரே.

**ஊழல் பேர்வழிகளை மக்களின் எதிரிகளாக அடையாளம் காட்டாமல், அறியாமல் தவறு இழைத்துவிட்டவர்களாகச் சித்தரிக்கும் ஹஸாரே, அவர்கள் மனந்திருந்திட வேண்டுகிறார்!**

அதே பொழுதில் முதலாளித்துவ பத்திரிகைகளோ ஹஸாரேயின் ஊழல் எதிர்ப்பு இயக்கத்தை, 1975-ல் ஜெயபிரகாஷ் நாராயணன் எடுத்த இயக்கத்தோடு ஒப்பிட்டு வானளாவப் புகழ்ந்து எழுதிவருகின்றன. இது போன்ற இயக்கத்தின் மூலமே ஊழலை ஒழித்து விடலாம் என்ற பிரேமையை உருவாக்கவும் அவை தவறவில்லை.

ஆனால், ஹஸாரேயின் இந்த ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் பலன்களைக் கொத்திச் செல்ல, காங்கிரஸ் கழுகுகள்தான் அரசியல் வானில் வட்டமடித்து வருகின்றன. அம்மாநிலத்தின் கொங்கன் பகுதியில் நடந்துள்ள உள்ளூராட்சி தேர்தல்களில், சிவசேனா-பா.ஜ.க. கூட்டணியை மண்ணைக் கவ்வச் செய்து காங்கிரஸ் வென்றிருப்பது இவ்வுண்மையைத்தான் உணர்த்துகிறது. மேலும், பத்திரிகைகள் குறிப்பிடும் ஜெ.பி. இயக்கத்தின் பரிணாம வளர்ச்சி ஊழல் பேர்வழிகளையும், அதிகார வெறியர்களையும் கொண்ட ஜனதா தளத்தைதான் உருவாக்கித் தந்துள்ளது. எனவே, கேழ்வரகில் நெய் வழிகிறதென்று கூறும் இப்பசப்பு பேர்வழிகளின் தலைமையைப் புறக்கணிப்பதுதான், ஊழல் ஒழிப்புப் போராட்டத்தின் வெற்றிக்கு வழி வகுக்கும்.

● மாரி

# ஆப்பிரிக்காவில் இனப் படுகொலைகள்:

## பின்னணியில் ஏகாதிபத்தியம்

மத்திய ஆப்பிரிக்க நாடான ருவாண்டாவில், 1994-ம் ஆண்டு இறுதியில் ஹூடு இன மேலாதிக்க அரசும், ஹூடு இனக் கூலிப்படையும் கைகோர்த்துக் கொண்டு கட்டவிழ்த்துவிட்ட இனவெறித் தாக்குதலில் ஐந்து இலட்சத்துக்கும் அதிகமான டுட்ஸி இனத்தவர் படுகொலை செய்யப்பட்டனர். இதைத் தொடர்ந்து டுட்ஸி தேசபக்த முன்னணியைச் சேர்ந்த டுட்ஸி இனத்தினர் அந்நாட்டு அரசு அதிகாரத்தைக் கைப்பற்றினர். அரசு அதிகாரம் கைமாறியதால், பழிவாங்கப்படுவோம் என அஞ்சி, 10 லட்சத்துக்கும் மேலான ருவாண்டா ஹூடு இனத்தினர் அருகிலுள்ள ஜாய்ரே நாட்டில் அகதிகளாகத் தஞ்சமடைந்தனர்.

ஹூடு இனத்தைச் சேர்ந்த ஜாய்ரே நாட்டு அதிபர் மோபுடு, அகதிகளோடு அகதிகளாக ஹூடு இனக் கூலிப் படையினருக்கும், முன்னாள் இராணுவத் தளபதிகளுக்கும் தனது நாட்டில் தஞ்சமளித்தார். ஏற்கனவே ஹூடு-டுட்ஸி இன மோதல்களாலும், உள்நாட்டுப் போராலும் கொந்தளித்துக் கொண்டிருந்த ஜாய்ரேயில், மோபுடுவின் இந்த இனப்பற்று எரியும் நெருப்பில் எண்ணெயை ஊற்றியதுபோல ஆயிற்று.

இருநூறு ஆண்டுகளுக்கும் மேலாக ஜாய்ரேயின் கிழக்கு எல்லைப் பகுதியில் வாழ்ந்து வரும் டுட்ஸி இனத்தவரைத் துரத்திவிட்டு, அப்பகுதியில் ருவாண்டா ஹூடு இனத்தவரை நிரந்தரமாகக் குடியமர்த்தும் சதித் திட்டம் தயாரானது. இந்த இனத் தூய்மைப்படுத்தல் நடவடிக்கையில் ஜாய்ரே அரசுப் படையும், ருவாண்டா ஹூடு இனக் கூலிப் படையினரும் கைகோர்த்துக் கொண்ட இறங்கினர்.

இதனால், ஜாய்ரேயில் கடந்த ஒரு வருடமாக டுட்ஸி-ஹூடு இன மோதல்களும், இனப் படுகொலைகளும், ஜாய்ரே அரசுப் படைகள்-ஹூடு கூலிப் படையினருக்கும், சிறுபான்மை டுட்ஸி இனப் போராளிகளுக்கும் இடையே உள்நாட்டு சண்டையும் தீவிரமடையத் தொடங்கின. இந்நிலையில் ஜாய்ரேயின் கிழக்கு மாகாண ஆளுநர், "டுட்ஸி இனத்தவர் உடனடியாக நாட்டை விட்டு வெளியேற வேண்டும் இல்லை மரணத்தை எதிர்கொள்ள நேரும்" என உத்தரவிட்டார்.

இந்த உத்தரவு மத்திய ஆப்பிரிக்க நாடுகளெங்கிலும் மோசமான எதிர் விளைவுகளைத் தூண்டியது. டுட்ஸி இனத்தினர் ஆளும் ருவாண்டாவும், புருந்தியும் ஜாய்ரே டுட்ஸி இனப் போராளிகளுக்கு ஆதரவாக நேரடியாகவே களத்தில் இறங்கின. இப்பின்புலத்தை ஆதாரமாகக் கொண்டு, டுட்ஸி இனப் போராளிக் குழு, கிவு பிராந்தியத்திலுள்ள ஸ்வாதே பகுதியைக் கைப்பற்றியது.

இதனால் இப்பிராந்தியத்தில் கோமா எனும் பகுதியில் குடியமர்த்தப்பட்டிருந்த 2 லட்சம் ருவாண்டா ஹூடு இன அகதிகள், உயிருக்கு அஞ்சி முகாமை விட்டு வெளியேறி விட்டனர்; மற்றொரு முகாமான புகாவுவிலுள்ள 4 லட்சம் அகதிகளும் வெளியேறி விடக்கூடும். அலைஅலையாக வெளியேறும் அகதிகள், கால்நடையாகவே ருவாண்டாவிற்கும் ஜாய்ரேயின் உள்பகுதியிலும் சென்று தஞ்சமடைந்து வருகின்றனர்.

தீவிரமாகி வரும் உள்நாட்டு சண்டையின் காரணமாக ஐ.நா. உதவிகள் தடைப்பட, ஹூடு இன அகதிகள் உணவின்றிப் பட்டினியாலும், தொற்றுநோயாலும் மரணமடையும் அபாயம், மத்திய ஆப்பிரிக்க நாடுகளைத் திறந்த வெளி இடுகாடாக மாற்றக் காத்திருக்கிறது. மேலும், ருவாண்டா, ஜாய்ரே, புருந்தி, உகாண்டா, தான்சானியா - இந்நாடுகளெங்கும் ஹூடு-டுட்ஸி இன மோதல்கள் பற்றிப் பரவவும், ஜாய்ரே இனரீதியாகச் சிதறுண்டு போகவும் கூடிய பேரழிவின் விளிம்பில் மத்திய ஆப்பிரிக்கா அமர்ந்துள்ளது.

• • •

இந்த இனவெறியை யார் விதைத்தது? டுட்ஸிக்களா... இல்லை ஹூடுக்களா? நானூறு ஆண்டுகாலமாக நிலவி வந்த இன ஒற்றுமை, காலனிய ஆட்சியில் சிதைந்து போனது. அந்த வெற்றிடத்தில் இனவெறி குடியமர்ந்து கொள்ள பாதை வகுத்துக் கொடுத்தன, ஏகாதிபத்தியங்கள்.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் ருவாண்டாவை ஆண்டு வந்த பெல்ஜியம் ஏகாதிபத்தியம், தனது பொருளாதாரச் சுரண்டலுக்காக சமூக நிலங்களைச் சரக்காக மாற்றி, ஹூடு இனத்தவரைக் கட்டாய உழைப்பில் தள்ளிவிட்டது. காலனியவாதிகளுக்கே உரித்தான பிரித்தாளும் சூழ்ச்சியைக் கொண்டு, நிலங்களில் வரி வசூலிக்கும் உரிமையை டுட்ஸி இனத்தவரிடம் ஒப்படைத்தது. ஹூடு இனத்தவரை ஆதிக்க சக்திகளாகச் சித்தரித்து, வரலாறு சிதைக்கப்பட்டது. ருவாண்டாவை விட்டு வெளியேறியபொழுது, ஹூடு இனத்தவரிடம்



படிப்பகம்

www.padippakam.com



ஜாய்ரேயிலிருந்து ருவாண்டாவை நோக்கி ஓடும் ஹுடு இன அகதிகள் - இந்நாடோடி வாழ்வுக்கு ஏகாதிபத்தியங்களே காரணம்

ஆட்சி பொறுப்பை ஒப்படைத்தது, தீரா இனப்பகைக்கு விதையிட்டுச் சென்றது.

நேரடி காலனி ஆதிக்கம் முடிவுக்கு வந்தபின் தொடர்ந்த 'சுதந்திர' நாட்களிலும் ருவாண்டாவின் பொருளாதாரம் மேற்குலகைச் சார்ந்தே இருந்து வந்தது. காபி ஏற்றுமதிதான் ருவாண்டாவின் முக்கியத் தொழில்; எண்பது சதவீத அந்நியச் செலாவணி இதன்மூலம்தான் ஈட்டப்பட்டது. ஏற்றுமதி சார்ந்த பணப் பயிர் உணவுப் பொருள் உற்பத்தியை விழுங்கத் தொடங்கியதால், 1980-ல் ருவாண்டாவில் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து 1989-ல் அமெரிக்காவின் நலனுக்காக, உலகச் சந்தையில் காபி கொட்டையின் விலை 50 சதவீதம் குறைக்கப்பட்டபொழுது, ருவாண்டாவின் பொருளாதாரம் மரணப் படுக்கையில் வீழ்ந்தது. உணவுப் பஞ்சம், பொருளாதாரத் தேக்கம், ச்மூகத்தில் ஏற்கனவே நிலவி வந்த இனப் பகைமை எல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்து, 1990-ல் ருவாண்டாவில் உள்நாட்டுப் போர் வெடிக்கக் காரணமாயின.

இச் சமயத்தில், எரிகிற வீட்டில் பிடுங்குகிற வரை இலாபம் என்ற கொள்கை கொண்ட ஐ.எம்.எ.ஃப். ருவாண்டாவில் நுழைந்தது. சுதந்திர சந்தைக்காக அந்நிறுவனம் கொண்டு வந்த சீர்திருத்தங்கள், 1994-ல் நடந்த டுட்ஸி இனப் படுகொலைக்கு முதற்காரணமாக அமைந்தன.

வீழ்ந்து கிடந்த காபி ஏற்றுமதியைத் தூக்கி நிறுத்த, ஐ.எம்.எ.ஃப். ருவாண்டாவின் பணத்தின் மதிப்பை 50 சதவீதம் குறைத்தது. பணத்தின் மதிப்பு வீழ்ந்த அளவுக்கு காபி கொள்முதலின் விலையை அரசு உயர்த்தாததால், விவசாயிகளின் வருமானம் அன்றாட உணவுத் தேவையைக்கூட ஈடுசெய்யவில்லை. 1992-ல் மீண்டும் பணத்தின் மதிப்பு குறைக்கப்பட்டதால், காபி விவசாயிகள் வறுமை-கடன் வலைக்குள் நெட்டித் தள்ளப்பட்டனர். காபி கொள்முதலில் ஈடுபட்டு வந்த ''ருவாண்டெக்ஸ்'' என்ற அரசு நிறுவனம் செயல் இழந்து போனது. நாடெங்கும் கொதித்தெழுந்த விவசாயிகள் மூன்று லட்சம் காபிச் செடிகளை வெட்டி வீழ்த்தியதோடு, காபி உற்பத்தி அதன் இறுதி முடிவை எட்டியது.

அரசு செலவைக் கட்டுப்படுத்த விவசாயத்திலும், தொழிலும் அரசு முதலீடு செய்வது கைவிடப்பட்டது; அந்நியக் கடனை அடைக்க, அரசின் மின்சாரத் துறையும் (எலெக்ட்ரோகாஸ்) தொலை தொடர்புத் துறையும் (ருவாண்டாடெல்) தனியார்மயமாக்கப்பட்டன. வாழ்விழந்த விவசாயிகளும், வேலையிழந்த தொழிலாளர்களும், வேலையில்லா இளைஞர்களும் கொண்ட பட்டாளமொன்று உருவானது.

சமூகப் பொருளாதார வாழ்வில் ஏற்பட்ட நசிவு, டுட்ஸி இன மக்கள் தொடுத்து வந்த உள்நாட்டுப் போரைத் தீவிரப்படுத்தியது. உள்நாட்டுப் போரை ஒடுக்க இராணுவம் ஊதிப் பெருக்கப்பட்டது. இராணுவ வீரர்களின் எண்ணிக்கை 5,000-லிருந்து 40,000-ஐ தொட்டது. இராணுவத் தளவாடங்களைக் குவிக்க ஜெர்மனி, பிரான்சு, பெல்ஜியம், அமெரிக்கா, ஐரோப்பிய பொருளாதாரக் குழுமம் என எல்லா ஏகாதிபத்தியங்களும் போட்டிப் போட்டுக் கொண்டு கடனைக் கொடுத்தன. வேலையற்றுச் சுற்றித் திரிந்த பட்டாளத்திடமிருந்து ஹுடு கூலிப்படை உருவாக்கப்பட்டு, பிரான்சிடமிருந்து பெற்ற ஆயுதங்கள் கொடுக்கப்பட்டன. இதன் உச்சக்கட்டத்தில் ஐந்து இலட்சத்துக்கும் மேற்பட்ட டுட்ஸி இன மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்; பத்து இலட்சம் ஹுடு இன மக்கள் அகதிகளாக நாட்டை விட்டு ஓடினர். ஆட்சி மாறினாலும் அவலங்கள் தொடர்கதையானது.

> உற்பத்தியின் இயற்கையான பரிணாம வளர்ச்சியில், ஒரே தேசிய இனமாக உருவெடுக்க வேண்டிய இனக் குழுக்களை தீராப் பகைவர்களாக்கிய ஏகாதிபத்தியங்கள், இனமோதலின் பொழுது ''உதவி'', ''பன்னாட்டு அமைதிப் படை'' என்ற பெயரில் அம்மக்களை அவமதிக்கவும் செய்கின்றன.

• • •

ருவாண்டா தனியொரு நாட்டின் வரலாறல்ல; ஆப்பிரிக்கா கண்டத்திலுள்ள துணை சகாரா நாடுகள் அனைத்திற்கும் இது பொருந்தக் கூடியது. காலனிய ஆட்சியாளர்கள் ால் புகுத்தப்பட்ட முதலாளித்துவ உற்பத்தி முறையும், அதன் பின்னர், ஐ.எம்.எ.ஃப்.- உலக வங்கியால் கொண்டு வரப்பட்ட சீர்திருத்தங்களும் அவ்வின மக்களிடம் இருந்ததைத் தட்டிப் பறித்துக் கொண்டதேயன்றி, புதிதாக எதையும் தந்துவிடவில்லை. இன்று இக்கண்டத்தின் பெரும்பாலான நாடுகள், உணவிற்கே ஏகாதிபத்தியங்களிடம் கையேந்தி நிற்க வேண்டிய அவலநிலையிலுள்ளன.

உற்பத்தியின் இயற்கையான பரிணாம வளர்ச்சியில், ஒரே தேசிய இனமாக உருவெடுக்க வேண்டிய இனக்குழுக்களை தீராப் பகைவர்களாக்கி மோதவிட்டு வேடிக்கை பார்க்கின்றன, ஏகாதிபத்தியங்கள். இந்த சுரண்டல் வரலாற்றை மூடிமறைத்துவிட்டு, 'நாகரிகமற்ற இன வெறியர்கள்' என பழிபோட்டு தப்பிக்கப் பார்க்கின்றன, அவை. ''உதவி'', ''அமைதிப் படை'' என்ற பெயரில் மீண்டும் மீண்டும் அம்மக்களை அவமானப்படுத்துகின்றன.

''அகதிகளை சொந்த நாட்டுக்குத் திரும்பி விடும்படி'' உத்தரவிடுகிறது மேற்குலகம். இதுதான் இப்பிரச்சினைக்குத் தீர்வாம்! ''விவசாயம் குடிமுழுகிப் போன பின்பு சொந்த நாட்டிற்குத் திரும்பி என்ன செய்வது?'' இதுதான் அகதிகளின் முன் எழுந்து நிற்கும் கேள்வி. சுயமான தேசியப் பொருளாதாரத்தைக் கட்டியமைக்க வலுகொண்ட புரட்சிகர வர்க்கங்கள் அரசியல் அரங்கில் எழுந்து நிற்காதவரை, இனப்படுகொலைக்கும், நாடோடி வாழ்க்கைக்கும் நிரந்தரத் தீர்வு காண வாய்ப்பில்லை!

• ரஹீம்



படிப்பகம்

www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## கடை தேங்காயும் வழி பிள்ளையாரும்

தமிழ்நாட்டில் மின்சாரம் உற்பத்தி செய்ய 16 தனியார் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது தமிழக அரசு. இவை தயாரிக்கும் மின்சாரத்தை "தமிழக அரசே வாங்கிக் கொள்ளும்" என்ற ஒப்பந்தத்தோடு, மின் நிலையம் அமைக்கத் தேவைப்படும் நிலங்களை, இந்நிறுவனங்களுக்கு இனாமாக வழங்கவும் தி.மு.க. அரசால் உத்தரவிடப்பட்டுள்ளது.

## காப்புறுதி தொழிலில் பன்னாட்டு நிறுவனங்கள்

நாட்டுடைமையாக்கப்பட்டுள்ள காப்புறுதி தொழிலை தனியாருக்கும் பன்னாட்டு நிறுவனங்களுக்கும் தாரை வார்ப்பதில் முதல் கட்டமாக, நான்கு பன்னாட்டு காப்புறுதி நிறுவனங்கள் தங்கள் விசாரணை அலுவலகங்களைத் திறந்து கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளன. ஜெர்மனியின் அலையன்ஸ், ஜப்பானின் யசுதா, சுவிட்சர்லாந்தின் ஜுரிச் காப்புறுதி நிறுவனம், அமெரிக்காவின் சிக்னா-இவைதான் ரிசர்வ் வங்கியின் அனுமதியைப் பெற்றுள்ள நான்கு நிறுவனங்கள்.

## பயிற்சிக் கூடங்களா? நீலத் திரைப்பட அரங்குகளா?

மத்திய பிரதேச மாநிலம் குவாலியர் நகரில் இயங்கி வரும் கம்ப்யூட்டர் பயிற்சி நிறுவனங்களில் இருந்து பாலுறவு வக்கிரம் மற்றும் பெண்களின் அரைகுறை நிர்வாணப் படங்கள் அடங்கிய 160 வெளிநாட்டு கம்ப்யூட்டர் பிளாப்பிகளை அம்மாநில போலீசார் கைப்பற்றியுள்ளனர். போலீசாரால் இழுத்து மூடப்பட்டுள்ள 28 நிறுவனங்களுள் "ஆப்டெக்" போன்ற புகழ்பெற்ற பயிற்சி நிலையங்களும் அடங்கும். மாணவர்களிடம் தனியாகக் கட்டணம் வசூலித்து இப்பிளாப்பிகளைப் போட்டுக் காண்பித்துவந்த இப்பயிற்சி நிறுவனங்கள், வெளி நபர்களுக்கு பிளாப்பிகளை ஒளிநாடாக்களைப் போல வாடகைக்கு விட்டும் வருமானம் ஈட்டியுள்ளன.

## தென்னக ரெயில்வேயில் தனியார் மயம்

உதகமண்டலத்தில் இருந்து குன்னிமேடு வரையிலும், 23 கி.மீ. தொலைவுள்ள மலைப்பாதை புகை வண்டி போக்குவரத்தினை இயக்கும் பொறுப்பை "சங்கீதா டிராவல்ஸ்" எனும் தனியார் நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது தென்னக ரயில்வே. இம்மலைப்பாதையில் செல்லும் புகைவண்டியில் பணிபுரியும் தொழிலாளர்களின் சம்பளத்தையும் இனி இந்நிறுவனம்தான் வழங்கும். இது தவிர, சேரன் மற்றும் நீல மலை விரைவு வண்டிகளில் படுக்கை விரிப்புகள் வழங்குவது, பயணிகளின் பொருள் பாதுகாப்பு அறையினை நிர்வகிப்பதையும், கோவை விரைவு வண்டியில் உணவு விற்பனை, சுகாதார பொறுப்புகளும் தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டன.

## பசி தரும் பிணி

பசியை மறந்து போதையில் ஆடுவோர்கள் பலருண்டு; ஆனால், பசி எடுப்பதைத் தடுக்க போதைப் பொருட்களைத் தேடி ஓடுகிறார்கள், தெருவோரச் சிறுவர்கள். வச்சிரப் பசை, பெட்ரோல், ஜெராக்ஸ் மற்றும் தட்டச்சுக்குப் பயன்படும் திரவம் - இவைதான் சமீபகாலமாக தெருவோரச் சிறுவர்கள் பயன்படுத்தும் போதைப் பொருட்கள். இவை விலை மலிவாக இருப்பதோடு, பசி எடுப்பதைக் குறைத்துவிடுவதால் பல சிறுவர்கள் இப்போதைப் பொருட்களுக்கு அடிமையாகி விடுகின்றனர். நாளாக நாளாக நினைவு ஆற்றல் குறைந்து, நுரையீரல் செயல் இழந்து விடும் அபாயம் இச்சிறுவர்களைச் சூழந்துள்ளது.


## ஏகாதிபத்திய கைக்கூலி

தாமிர உருக்காலை ஸ்டெர்லைட், தூத்துக்குடி துறைமுகத்தில் மூலப்பொருளை இறக்குமதி செய்துகொள்ள எடுத்த முயற்சியை, அப்பகுதி மீனவர்கள் போராடி தடுத்து நிறுத்தினர். இதன் பின், சிதம்பரம் மாவட்ட ஆட்சியர் ஸ்வரன் சிங், ஸ்டெர்லைட் எதிர்ப்பியக்க குழுவினரை பேச்சுவார்த்தைக்கு அழைத்தார். போராட்டக் குழுவினர் ஐந்து சுற்றுப்புறச் சூழல் ஆய்வாளர்களை பேச்சு வார்த்தைக்கு அனுப்பினர். பேச்சுவார்த்தை நாளன்று ஸ்வரன் சிங் திடீரென பல்டியடித்து, அவர்களுடன் பேச முடியாது எனக் கூறிவிட்டார். திருச்சி நகரை அழகுபடுத்த ஏழைகளின் குடிசைகளைப் பிய்த்தெறிந்த ஸ்வரன் சிங், பன்னாட்டு நிறுவனத்தின் முன் கையைக் கட்டிக் கொண்டு நிற்பதன் இரகசியம் என்னவோ?

## நீதிமன்ற முனைப்பின் மறுபக்கம்

போபால் விஷ வாயு விபத்துக்கு காரணமான யூனியன் கார்பைடு நிர்வாகத்தினர் மீது, மனிதப் படுகொலை குற்றச்சாட்டின் கீழ் விசாரணை நடந்து வந்தது. இவ்விசாரணையில் தலையிட்ட உச்சநீதி மன்றம், இக்குற்றச்சாட்டின் கீழ் விசாரணை நடத்த முகாந்திரம் இல்லையென்றும், நிர்வாகத்தினர் கவனக்குறைவாக நடந்து கொண்டனர் எனும் குற்றச்சாட்டின் கீழ்தான் விசாரணை நடைபெற வேண்டும் என உத்தரவிட்டுள்ளது. இனி வழக்கு வெற்றி பெற்றாலும், 3833 பேரை ஒரே நாளில் படுகொலை செய்த நிர்வாகத்தினருக்கு, வெறும் இரண்டாண்டு சிறை தண்டனைதான் கிடைக்கும்.

போபால் விஷவாயு விபத்தில் பாதிப்படைந்தவர்களின் ஊர்வலம்: பனிரெண்டு ஆண்டுகளாகியும் நீதி கிடைக்கவில்லை




## யெல்ட்சினின் நன்றிக் கடன்

ரசிய நாட்டு தொழிலாளர்களுக்கு யெல்ட்சின் அரசு தரவேண்டிய சம்பள பாக்கி 31,200 கோடி ரூபாய். ஓய்வுபெற்ற தொழிலாளர்களுக்குத் தர வேண்டிய பாக்கி 12,000 கோடி ரூபாய். சம்பள பாக்கியை உடனே தரக் கோரி சுரங்கத் தொழிலாளர்கள் போராட்டத்தில் குதித்து விட்டனர். ஆனால், தொழிலாளர்களின் வாழ்க்கை பற்றி அக்கறையற்ற யெல்ட்சின் அரசு, ஜார் ஆட்சியின் பொழுது ரசியா பிரான்சிடமிருந்து வாங்கிய கடனை அடைத்து விட ஒப்பந்தமிட்டுள்ளது. இதன்படி, ரசியா பிரான்சுக்கு 1400 கோடி ரூபாயை வெகுவிரைவில் திருப்பிச் செலுத்தும்.

• • •

Published and Owned by R. SHANMUGARAJ, 25 Arunachalam St., Jothiramalinga Nagar, Chennai - 600 083.
Printed by him at EZHIL PAINTS, 110, II Floor, 63, Arcot Rd., Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ

www.padippakam.com

# இதுதான் இன்றைய இந்தியா




தென் கொரியாவைச் சேர்ந்த ஹூண்டாய் கார் நிறுவனத்தின் தொழிற்சாலையை ஸ்ரீபெரும்புதூருக்கு அருகே இருங்காட்டுக் கோட்டையில் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழாதான் இந்தப் படம். ''வந்தார்கள்; கண்டார்கள்; வென்றார்கள்!'' எனக் கூறுவார்களே, அது இந்த நிறுவனத்திற்கு முற்றிலும் பொருந்தும். கருணாநிதி ஆட்சிக் கட்டிலில் அமர்ந்த பின்தான், 1400 கோடி ரூபாய் முதலீட்டில் தொழிற்சாலையை அமைக்க ஒப்பந்தம் கையெழுத்தானது. உடனேயே 550 ஏக்கர் நிலத்தை ஒதுக்கிக் கொடுத்தது தமிழக அரசு. இதோடு, ''1500 கோடி ரூபாய் முதலீடு செய்தால்தான் வரிச் சலுகை என்பதை அரசு 1000 கோடி ரூபாயைக் குறைக்கும்'' என அறிவித்தார், கருணாநிதி. மகிழ்ச்சியில் திளைத்து திக்குமுக்காடிப் போனார்கள் அம்முதலாளிகள்.

இதோ இந்தப் படத்தில் சாலையை மறித்துப் போராடுபவர்கள் ஸ்டாண்டர்ட் மோட்டார் தொழிற்சாலை தொழிலாளர்கள். சென்னைக்கு அருகே பெருங்களத்தூரில் இயங்கி வந்த இத்தொழிற்சாலையை நிரந்தரமாக மூடிவிட தமிழக அரசு சம்மதித்து விட்டதை எதிர்த்துதான் இச்சாலை மறியல் போராட்டம் நடந்தது. இன்றல்ல; நேற்றல்ல. கடந்த பதினைந்து ஆண்டுகளாகவே இத்தொழிற்சாலையைத் தடையின்றி நடத்தக்கோரி இத்தொழிலாளர்கள் போராடி வருகிறார்கள். தொழிற்சாலையை நடத்த தங்கள் சேமிப்புகளையும் வாரித் தந்த அத்தொழிலாளர்களுக்கு கருணாநிதி அளித்துள்ள புத்தாண்டு பரிசு, ஆலை மூடல்! தட்டுவண்டி பழ வியாபாரியாக, பூ வியாபாரியாக, கூலித் தொழிலாளியாக, பணக்கார வீட்டுக் காவலாளிகளாக - இப்படிக் கிடைக்கும் வேலையில் ஒட்டிக் கொண்டு, வாழ்க்கையை ஓட்டிவந்த இத்தொழிலாளர்களின் நம்பிக்கையை ஒரே நொடியில் சிதைத்து சின்னாபின்னமாக்கி விட்டது தி.மு.க. அரசு. வேலைபோன கலக்கத்தில் தடுமாறிய திருநாவுக்கரசு என்ற தொழிலாளி ரயிலில் அடிபட்டு முடமாகிப் போனார். முடமாகிப் போனது திருநாவுக்கரசு மட்டும்தானா? ஒரேயொரு கையெழுத்தில், ஒரே வீச்சில் 3,000 தொழிலாளர்களை நடைபிணமாக்கி விட்டாரே கருணாநிதி.



நாட்டின் செல்வத்தை, வளத்தைச் சுரண்டிச் செல்ல வந்த அந்நிய முதலாளிகளுக்கு பட்டுக் கம்பளம்; வரிச் சலுகைகள். ''கௌரவமாக உழைத்து வாழ வழி சொல்லுங்கள்'' எனக் கேட்ட தொழிலாளர்களின் வயிற்றிலே அடி! இன்னுமா இத்துரோகிகளைச் சகித்து வாழ்வது?